# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 மாசி 17 திங்கட்கிழமை (01-03-1999) UTHAYAN- A Lively National Tamil Daily கதிர்:80


## கொழும்பில் மற்றொரு மின்மாற்றி தகர்ப்பு!

### செட்டித்தெருவில் சம்பவம்

கொழும்பு, மார்ச். 1

கொழும்பு செட்டித்தெருவில் அமைந்துள்ள மின்மாற்றி ஒன்று நேற்று மாலை 6-30 மணியளவில் குண்டு வெடிப்பால் தகர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மின்மாற்றி தகர்ப்பால் செட்டித்தெருவின் ஒரு பகுதிக்கான மின்விநியோகம் தடைப்பட்டுள்ளது.

மின்மாற்றி அமைந்துள்ள பகுதியை நேற்று மாலை சுற்றி வளைத்த பொலீஸார் அங்குள்ள பலரை விசாரித்தனர்

இச்சம்பவம் தொடர்பாக எவரும் நேற்றிரவு வரை கைது செய்யப்பட வில்லை என்று பொலீஸார் தெரிவித்தனர். (இ-3)

### மாகாணசபைத் தேர்தல்களில்

## மக்கள் என்னை நிராகரித்தால்

## அரசியலிலிருந்து ஓதுங்கத் தயார்!

### ஜனாதிபதி அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 1

அடுத்த மாதம் நடைபெறும் மாகாண சபைத் தேர்தல்களில் மக்கள் என்னை நிராகரித்தால் அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொள்ள நான் தயாராக இருக்கிறேன்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாகாண சபைகளுக்கான தேர்தல் பிரசாரத்தை மத அனுட்டானங்களுடன் அனுராதபுரத்தில் ஆரம்பித்து வைத்து அங்கு உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் அங்கு பேசுகையில் மேலும் கூறியதாவது:-

ஐந்து மாகாண சபைகளுக்குமான தேர்தலை நீதி, நியாயமான முறையில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்தத் தேர்தலில் மக்கள் என்னை நிராகரித்தால் வீடு செல்லத் தயாராக இருக்கின்றேன்.

வடமேல் மாகாண சபைத் தேர்தலில் ஊழல், மோசடி இடம்பெற்றுள்ளன என்பதை ஏற்றுக் கொள்கிறேன். எமது கட்சியிலும் சில எருமைகள் இருக்கத்தான் செய்கின்றனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே. கட்சி எம்.பி. ஜெயலத் மீண்டும் வன்னி செல்கிறார்!

## புலிகளையும் சந்திக்கலாம்

கொழும்பு, மார்ச் 1

ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன மருத்துவக் குழு ஒன்றுடன் இன்று இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிக்குச் செல்வதாக வவுனியாவில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வன்னியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வைத்தியச் சேவை முகாம் ஒன்றை நடத்துவதுடன் விடுதலைப் புலிகள் அமைப்புப் பிரதிநிதிகளையும் அவர் சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த வருடம் மே மாதம் 29 ஆம் திகதி முதல் முதலாம் திகதிவரை இராணுவக் கட்டுப்பாடற்ற மடுப் பகுதிக்கு அவர் சென்றிருந்ததும்—

அங்கு அவர் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தினார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டு இரகசியப் பொலீஸாரால் அவர் விசாரிக்கப்பட்டதும்— தெரிந்தவையே.

மடுப்பகுதியில் உள்ள மக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பலகல்லவுக்கு உயர் பதவி

கொழும்பு, மார்ச் 1

இராணுவத்தின் பிரதிப் பிரதம கட்டளை அதிகாரியாகப் பதவியேற்றுள்ள மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல அடுத்த மாதம் முதலாம் திகதி பிரதம கட்டளை அதிகாரியாகப் பதவி உயர்வு பெறலாம் எனக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

தற்சமயம் அந்தப் பதவியை வகித்துவரும் மேஜர் ஜெனரல் பற்றிக் பெர்னான்டோ இம்மாத இறுதியில் ஓய்வு பெற்றுச் செல்வதையடுத்தே இந்தப் பதவிக்கு பலகல்ல நியமிக்கப்படலாம் என்றும் —

அடுத்த மாதம் இராணுவக் கட்டமைப்பில் பல மாற்றங்கள் கொண்டு வரப்படவுள்ளதாகவும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

வன்னி படைகளின் தளபதி பதவியுடன் மேஜர் ஜெனரல் பலகல்ல தற்சமயம் பிரதிப் பிரதம கட்டளை அதிகாரி பதவியையும் வகிக்கிறார்.

இதே சமயம் வன்னியில் படைகளின் தளபதியாகவிருக்கும் மேஜர் ஜெனரல் லயனல் பலகல்லவுக்கு மேலும் இரு பிரிக்கேட் பொறுப்பு எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் வழங்கப்படவிருக்கின்றது.

வெலிஓயாப் பகுதியில் அமைந்துள்ள இரு பிரிக்கேட்டுக்களே அவரின் பொறுப்பில் ஒப்படைக்கப் படவிருக்கின்

(10ஆம் பக்கம் பார்க்க)

## மெய்ப் பாதுகாவலர்களை நியமிக்கும் திட்டம் ஈ. பி. டி. பியால் நிராகரிப்பு!

### பட்டியல் சமர்ப்பிக்க இன்று கடைசி நாள்

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ். மாவட்ட உள்ளூராட்சி உறுப்பினர்களின் பாதுகாப்புக்கு மெய்ப்பாதுகாவலர்களை நியமிக்க பாதுகாப்பு அமைச்சு நடைமுறைப்படுத்தவிருந்த திட்டத்தை தமது அமைப்பு நிராகரித்து விட்டதாக ஈ. பி. டி. பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் வி. கே. ஜெகன் தெரிவித்தார்.

உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்களுக்கு மெய்ப் பாதுகாவலர்களை நியமிக்கும் திட்டத்தின் கீழ் மெய்ப்பாதுகாவலர்களின் பெயர் விவரங்களை இன்று ஒப்படைக்குமாறு பலாலித் தலைமையகம் அரசியல் கட்சிகளைக் கேட்டிருந்தது.

இந்தத் திட்டத்தைத் தமிழர் விடுதலைக் கூட்டணி நிராகரித்து விட்டதாக அறிவித்திருந்தது.

''தற்போதுள்ள சூழ்நிலையில் உள்ளூராட்சி உறுப்பினர்களின் பாதுகாப்புக்காக நியமிக்கப்படும் மெய்ப் பாதுகாவலர்கள் பொலீஸ் சீருடையில் பணி செய்ய முடியாது. அவ்வாறு பணிபுரிவதால் பல சிக்கல்கள் உருவாவதுடன் பொதுமக்களும் பாதிக்கப்படுவர்.

பொலீஸ் சீருடையில் பணியாற்ற நாம் தயாரில்லை. எமது கட்சி சார்பில் நியமிக்கப்படவிருக்கும் 220 பேருக்குரிய ஆயுதங்களைத் தாருங்கள். ஆனால் சீருடையுடன் பணியாற்ற முடியாது.

தற்போதைய திட்டத்தை நாம் ஏற்கமுடியாது. மாற்றுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டால் அது குறித்துப் பரிசீலனை செய்யலாம்—இப்படிப் படை அதிகாரிகளிடம் தாம்

[10 ஆம் பக்கம் பார்க்க]

### லண்டனில் இருந்து

## நாடு கடத்தப்பட்டவர் குறித்து தகவல் இல்லை

கொழும்பு, மார்ச் 1

லண்டனில் இருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட தமிழ் இளைஞர் ஒருவர் கொழும்பில் காணாமல் போய்விட்டார். அவரைக் கண்டு பிடிக்கும் முயற்சி இதுவரை கைகூடவில்லை.

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த இந்த இளைஞர் காணாமற் போனது தொடர்பாக அவரது உறவினர்கள் மனித கௌரவத்துக்கான மன்றத்தின் செயலாளர் சட்டத்தரணி மகேஸ்வரி வேலாயுதத்துடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

டிசெம்பர் 10 ஆம் திகதி லண்டனில் இருந்து இவர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டதாகவும் டுபாய் விமான நிலையத்தில் இருந்து 11 ஆம் திகதி கொழும்பு வந்து சேர்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

அவர் பற்றிய தகவல் இன்னும் தெரியவரவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

## வரதராஜப் பெருமாள் மட்டக்களப்பு விஜயம்

மட்டக்களப்பு, மார்ச் 1

வடக்கு—கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் நேற்று முன்தினம் மட்டக்களப்புக்கு விஜயம் செய்தார்.

இவருக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளைதேசியதுணைப் படை (ராஸிக்குறூப்) மேற்கொண்டிருந்தது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பைப்புனரமைப்பது தொடர்பாக மட்டக்களப்பில் உள்ள ஈ. பி. ஆர். எல். எவ். பிரமுகர்களுடன் அவர் பேச்சுக்களை நடத்திவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வரதராஜப் பெருமாள் சமீபத்தில் யாழ். வந்து திரும்பியது தெரிந்ததே. (இ-21)

## லங்காமுடித்த3தடவைகள் பயணிகள்சேவை நடத்தும்

திருகோணமலை, மார்ச் 1

தற்சமயம் காங்கேசன் துறைக்கு வந்து சேர்ந்துள்ள 'லங்கா முடித்த'' கப்பல் எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் மூன்று தடவைகள் காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் பயணிகள் சேவையை நடத்தவிருக்கின்றது.

எதிர்வரும் 10ஆம், 14ஆம், 18ஆம் திகதிகளில் இச்சேவைகள் நடைபெறலாம் என்றும்-

இந்தச் சேவைகள் மூலம் திருகோணமலையில் இருந்து மூவாயிரம் அகதிகளை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வர ஏற்பாடாகியுள்ளது என்றும்— தெரிவிக்கப்பட்டது.

கப்பலில் பயணம் செய்யும் பயணிகள் 30 கிலோ பொருள்களை மட்டும் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர் என்றும்—

அதற்கு மேல் பொருள்களைக் கொண்டு வருபவர்கள் கப்பலில் பயணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும்— கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்

# குமார் பொன்னம்பலத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முயற்சி?

கொழும்பு, மார்ச் 1

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் செயலாளரும் சட்டத்தரணியுமான குமார் பொன்னம்பலத்திற்கு எதிராக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யும் நடவடிக்கையில் இரகசியப் பொலீஸார் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குமார் பொன்னம்பலத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வது தொடர்பாக சட்ட ஆலோசனைகளை வழங்குமாறு இரகசியப் பொலீஸார் சட்டமா அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இரு மாதங்களுக்கு முன்னர் சுவர்ணவாஹினி தொலைக்காட்சி சேவையில் நடத்தப்பட்ட 'ரத்த இற' என்ற நிகழ்ச்சியில் குமார் பொன்னம்பலம் கலந்து கொண்டு விடுதலைப் புலிகளுக்கு சார்பான சில கருத்துக்களைத் தெரிவித்தார் எனக் கூறப்படுகிறது.

மேற்படி தாலைக்காட்சி சேவையில் குமார் பொன்னம்பலம் தெரிவித்த கருத்தானது இனவாத உணர்வைத் தூண்டக் கூடியதாக இருந்ததுடன் தடை செய்யப்பட்ட இயக்கத்திற்கு ஆதரவாக வெளியிடப்பட்ட கருத்து எனவும் இரகசியப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்:

இந்தத் தொலைக்காட்சிப் பேட்டி தொடர்பாக குமார் பொன்னம்பலம் இரகசியப் பொலீஸாரினால் இரு தடவைகள் சுமார் 8 மணித்தியாலங்கள் வரை விசாரணை செய்யப்பட்டார்.

இந்த விசாரணைகளின் போது இரகசியப் பொலீஸார் தெரிவித்த அனைத்துக் குற்றச்சாட்டுக்களையும் அவர் நிராகரித்த போதும் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யும் அளவுக்கு சான்றுகள் உள்ளன என்று இரகசியப் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

குமார் பொன்னம்பலத்திற்கு எதிரான குற்றச் சாட்டுக்கள் அனைத்தையும் ஒன்று திரட்டி சட்டமா அதிபருக்கு அறிக்கை வடிவில் சமர்ப்பித்து வழக்குத் தாக்கல் செய்வது தொடர்பான சட்ட ஆலோசனைகளை இரகசியப் பொலீஸார் கோரியுள்ளனர். (ஐ-5-10)


P. I. பெர்னாண்டோ நிறுவன
ஆதரவில்
அகில இலங்கைக் கம்பன் கழகத்தின்
**நிலாக்கால நிகழ்ச்சி**

இடம்: கம்பன் கோட்டம், நல்லூர்.
காலம்: 01-03-99 திங்கட்கிழமை

ஆய்வரங்கு

பொருள்:
''இளைய சந்ததியில் இலக்கியவின் நிலைகள் காண்போம்''
தலைமை: டாக்டர் செ. நச்சினார்க்கினியன்
பங்குபற்றுவோர்: ஆறு. திருமுருகன், பேராசிரியர் தயா சோமசுந்தரம், இரா.செல்வ வடிவேல், ஏ.ரி. பொன்னுத்துரை

—அகில இலங்கைக் கம்பன் கழகத்தினர்.

(63535)



**முதலாம் ஆண்டு நினைவு நாள்**



தோற்றம் 27 — 05 — 1971
மறைவு 11 — 03 — 1998

செல்வன்
**பாலு கபிலதாசன்** (கபிலன்)

ஓராயிரம் ஆண்டுகள் கடந்தாலும்
உமது உருவம் எமது கண்களினின்றும் மறையாது...

உமது பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா
தம்பிமார், தங்கைமார்.

கலைநகர்,
அளவெட்டி தெற்கு.

(சி/6651)



**மரண அறிவித்தல்**

**கந்தையா அரியகுட்டி**

கைதடி நுணாவிலைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா அரியகுட்டி 27-02-99 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அப்பாச்சி ஆகியோரின் அன்பு மகனும் தாமோதரம் பிள்ளை - சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும் கனகம்மாவின் அன்புக் கணவரும் மகாதேவி (B.A) அவர்களின் தந்தையாரும் கனகரத்தினம், சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28-02-99) நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. மகாதேவி (B.A)
(மகள்)

வாகையடி வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(63524)


## நாணய தொலைபேசி

நவாலி, மார்ச் 1

நவாலி தேவாலயம்அருகில் நாணயத் தொலைபேசி ஒன்று கடந்தவாரம் பொருத்தப்பட்டுள்ளது. (இ-100)


SHAMROCK
A/L 2001 - MATHS
நேர்கோட்டியக்கம்
இருபடிச்சமன்பாடு
Mon, Sat., Sun.
4-00 p m.
Mr. சிவலோகநாதன்
(B. Sc.)

2000 - G. A. Q.
1st in Com.
Spoken English
ஆண்டு 6 தொடக்கம் 11 வரை
புலமைப் பரிசில் ஆண்டு 5
(சி/6648)



லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி
இன்று முதல்
சிவாஜி - பார்த்திபன்
ராதிகா, ராதா, இளவரசி
நடித்த
தாவணிக்கனவு
காட்சிகள் 10. 30, 2. 30
(பழைய நேரம்)
T. P. No. 070-212223
(63520)



விற்பனைக்கு

சேர்விஸ் ஸ்ரேசன்
இயந்திர சாதனங்கள்
உபகரணங்களுடன்
முழுமையாக
விற்பனைக்கு உண்டு.

விவரங்களுக்கு:
லட்சுமி ஸ்ரோர்ஸ்
ஆடியபாதம் வீதி,
நல்லூர் மார்க்கட்
என்ற முகவரிக்கு வரவும்.
(சி/6649)


வடமராட்சி வலயத்தில்

## 30 பகுதிநேர ஆங்கில ஆசிரியர் நியமிக்கப்படுவர்

வடமராட்சி, மார்ச் 1

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு மேலும் 30 பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

பகுதிநேர ஆங்கில ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பங்கள் வடமராட்சி கல்விப் பணிப்பாளரினால் தற்போது கோரப்பட்டுள்ளன.

இதற்கான போட்டிப் பரீட்சை இம்மாதம் 7 ஆம் திகதி புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும், கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியும், ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியும் பெற்றுள்ள 60 வயதுக்குட்பட்டவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம் என வடமராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் சி. சிவராசா தெரிவித்துள்ளார்.

## கூ. சங்கத் தலைவர்களின் கொடுப்பனவு அதிகரிப்பு

வலி. வடக்கு, மார்ச் 1

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களின் உதவுத் தொகைக் கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் ஒரு குறிப்பிட்ட தொகையே உதவு தொகை கொடுப்பனவாக இவர்களுக்கு வழங்கப்பட்டு வந்தது.

இனிமேல் சங்கம் ஈட்டும் இலாபத்துக்கு ஏற்ப உதவு தொகை கொடுப்பனவு நிர்ணயிக்கப்படும். இதன் பிரகாரம் ஆகக் கூடுதலாக 10 ஆயிரம் ரூபாவை கூட்டுறவுச்சங்கத் தலைவர்கள் பெற்றுக் கொள்ள முடியும். இக்கொடுப்பனவு தொடர்பான இப் புதிய திட்டம் இவ்வாண்டுமுதல் நடைமுறைக்கு வருகிறது. கூட்டுறவுத் திணைக்களம் இது தொடர்பான சுற்றறிக்கையை சகல மாகாண சபைகளின் கூட்டுறவு ஆணையாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது. (ஐ-86-173)

## படுக்கையில் வைத்துத் தாக்கப்பட்டுக் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 1

இரவு படுக்கையில் வைத்து இனந் தெரியாத சிலர் இரும்புக்கம்பியால் அடித்துத் தாக்கியதில் ஒருவர் தலையில் படுகாயமடைந்தார்.

கரணவாய் வடக்கு கொற்றாவத்தைப் பகுதியில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் செல்லையா முருகேசு (வயது 50) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

கட்டட புனரமைப்புப்பணி நடைபெறும் வீரபத்திரர் ஆலயத்தில் அங்கிருக்கும் கட்டடப் பொருள்களுக்கு காவலாகச் சென்று படுத்திருந்தவேளையே இச் சம்பவம் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்தவர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் ஆஸ்பதிரிக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஐ-15-109)

## அரை இறுதி ஆட்டம்

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவு விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்டுவந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரை இறுதி ஆட்டம் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் 4-30 மணிக்கு நடைபெறும்

நவாலி சென் பீற்றர்ஸ் வி. க. அணியும் இளவாலை இளம் ஹென்றீஸியன் வி க. அணியும் இந்த ஆட்டத்தில் மோதுகின்றன. (இ-3)

## விமான மூலம் சிகரெட்

கொழும்பில் இருந்து விமானம் மூலம் ஒருதொகை சிகரெட் நேற்று எடுத்துவரப்பட்டுள்ளது.

இன்றுமுதல் இந்தச் சிகரெட் கடைகளுக்கு விநியோகிக்கப்படும் என்று சிகரெட் நிறுவன யாழ், முகவர் தெரிவித்துள்ளார். (இ-3)


பளைப் பிரதேச செயலர் (உ.அ.அ.பிரிவு)
பிரிவுக்குட்பட்ட
தென்னைப் பயிர்ச்செய்கையாளர்களுக்கான
**தென்னை மானிய உதவித்திட்டம்**

தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையால் வழங்கப்பட இருக்கும் தென்னை மானிய உதவித் திட்டங்களை, நடைமுறைப்படுத்துவதற்கான தென்னங் காணிகளின் ஆரம்ப அறிக்கைகள் தயாரிப்பதற்காக—

1) சிறிய காணித் துண்டங்கள் (வீட்டுத் தோட்டம்) — 2 ஏக். உட்பட்ட
2) சிறு தோட்டம் — 2 ஏக். - 20 ஏக். வரை
3) பெருந்தோட்டம் — 20 ஏக். மேல்.

மேற் கூறப்பட்ட காணிச் சொந்தக்காரர்கள் ஒவ்வோர் காணித்துண்டுகளுக்கும் தனித்தனியாக சுய விவரங்களை, 1999 3-15 ஆம் திகதிக்கு முன்பாகப் பளைப் பிரதேச, தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு தபாலிலோ அல்லது காரியாலயத்திலோ தந்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தென்னங்காணியின் விவரங்கள்:-
1) காணிச்சொந்தக்காரரின் பெயரும், முகவரியும்:-
2) தென்னங்காணியின் பெயரும் / அமைவிடமும்:-
3) காணியின் விஸ்தீரணம் (ஏக்கரில்):-
4) காணி அமைந்துள்ள கிராம சேவையாளர் பிரிவு:-
5) சேதமாக்கப்பட்ட தென்னை மரங்கள் / கன்றுகள்;-
6) தற்போதுள்ள மரங்களின் எண்ணிக்கை / வயது:-

வ. மகாலிங்கம்
தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்
(அதிவிசேஷ தரம்)
தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை.

மே/பா.
உதவி அரசாங்க அதிபர் காரியாலயம்,
பளை.

(சி/6650)

# மன்னார் பகுதி பாதுகாப்பு அதிரடிப்படையினர் வசம்?

கொழும்பு, மார்ச் 1

மன்னார் பகுதியில் பாதுகாப்புப் பொறுப்புகள் படிப்படியாக இராணுவத்தினரிடம் இருந்து பொலீஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டு வருவதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அப்பகுதி இராணுவ முகாம்களைச் சேர்ந்த இராணுவத்தினர் அப்பகுதியில் இருந்து படிப்படியாக வெளியேறி வருவதாகவும் அதனையடுத்து அப்பகுதியைப் பொலீஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் கையேற்று வருவதாகவும் தெரிகிறது.

செட்டிக்குளம் முதல் உயிலங்குளம் வரையிலான பகுதிக்குப் பொறுப்பான முருங்கன் 214 ஆவது படைப் பிரிவைச் சேர்ந்த இராணுவத்தினர் கடந்த 5 நாள்களாக படிப்படியாக வெளியேறி வருவதாகவும், அங்கு இலங்கை பெந்த கொஸ்தே சபைக்குச் சொந்தமான பழைய கட்டடம் ஒன்றில் விசேட அதிரடிப்படையினர் பிரதான முகாமொன்றை அமைத்து தமது நிலையை வலுப்படுத்தி வருவதாகவும் தெரிகிறது.

மன்னார்த் தீவில் அதாவது மன்னார் நகரம் முதல் தலைமன்னார் வரையிலான சுமார் 18 கிலோ மீற்றருக்குப் பொறுப்பான 212 ஆவது படைப்பிரிவும் படிப்படியாக அங்கிருந்து வெளியேறி வருவதாகத் தெரிகிறது.

212 ஆவது பிரிவின் நடுக்குடா முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் அங்கிருந்து முற்றாக வெளியேறிவிட்டதையடுத்து அப்பகுதிக்கான பாதுகாப்புப் பொறுப்பை பொலிஸார் ஏற்றுள்ளதாகத் தெரிகிறது.

கடந்த வெள்ளியன்று வங்காலைப் பகுதியில் இருந்த இராணுவத்தினரும் அங்கிருந்த முகாமைவிட்டு வெளியேறி விட்டனர். அங்கும் பொலீஸாரே பாதுகாப்புப் பொறுப்பை ஏற்றுள்ளனர்.

ஆயினும் 212 ஆவது படைப்பிரிவின் தள்ளாடி முகாம் மற்றும் மன்னார் கோட்டை முகாம் ஆகியவற்றில் இராணுவத்தினர் தொடர்ந்தும் நிலைகொண்டிருப்பார்கள் என்று தெரிகிறது.

இதேவேளை—

மன்னாரில் பாதுகாப்புப் பொறுப்புகள் படிப்படியாகப் பொலீஸாருக்கு வழக்கப்பட்டு வருவது குறித்து கடந்த வியாழக்கிழமை மன்னார்க் கச்சேரியில் நடைபெற்ற மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் பேசப்பட்டதாகத் தெரிகிறது. (ஐ-10)

## உயர் நீதிமன்றுக்கு வந்த 'ஈழம்' முத்திரை!

கொழும்பு, மார்ச் 1

'ஈழம்' என்ற பெயர் அச்சிடப்பட்ட 50 சதம் பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட கொடுப்பனவு வவுச்சர் ஒன்று கொழும்பு உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசேட, பயங்கரவாத ஒழிப்பு விசேட பொலீஸ் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வந்த விசாரணைகள் கடந்த 26ஆம் திகதியில் இருந்து நுகேகொடையிலுள்ள விசேட புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முத்திரை ஒட்டப்பட்ட கொடுப்பனவு வவுச்சரை உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த உத்தியோகப் பற்றற்ற நீதிவானின் வீட்டுக்குச் சென்ற ரகசியப் பொலீஸார் அவரிடமிருந்து வாக்குமூலத்தைப் பதிவு செய்துள்ளனர்.

நுகேகொடைப் பொலீஸ் பகுதியிலுள்ள கடைகளிலும் தபாற்கந்தோர்களிலும் 'ஈழம்' எனப் பெயர் அச்சிடப்பட்ட முத்திரைகள் உள்ளனவா எனப் பொலீஸார் தேடுதல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

இந்த முத்திரைகள் எவ்வாறு கிடைத்தன? என்பதைக் கண்டறிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-10)

## பொதுக்கூட்டம்

வடமராட்சி, மார்ச் 1

தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் இம்மாதம் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஐ-173)

### மக்களின் முறைப்பாடுகள்:

## நடவடிக்கை எடுக்காத அதிகாரிகளிடம் விளக்கம்

விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப்பட்ட நபர்கள் மற்றும் அவர்கள் தங்கியிருந்த இடங்கள் பற்றிக் கடந்த காலங்களில் பொது மக்களால் பொலீஸாருக்கு வழங்கப்பட்ட தகவல்களில் பெரும்பாலானவை குறித்து உரிய முறையில் விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு தகவல்கள் வழங்கிய 300 பொதுமக்கள் அது குறித்து பொலீஸ் தலைமையகத்துக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

பொலீஸாருக்குக் கிடைத்த தகவல்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளாத அதிகாரிகளுக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் அவர்களிடமிருந்து விளக்கங்கள் கோரப்பட்டுள்ளன எனவும் 'லங்கா தீப' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ-10)

## வேலணை வீதிகளில் சிரமதானப் பணி

வேலணை, மார்ச் 1

ஊர்காவற்றுறைக்கான 777 ஆம் இலக்க பிரதான வீதியின் இரு மருங்கிலும் வளர்ந்துள்ளமரங்களின்கிளைகள், பஸ் பயணத்திற்கு இடையூறு விளைவிப்பதாக முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து நேற்று முன்தினம் வேலணைப் பிரதேச சபைத் தலைவர் தலைமையில் சிரமதானப் பணியொன்று மேற்கொள்ளப்பட்டு மரக்கிளைகள் அகற்றப்பட்டன.

இச் சிரமதானப் பணியில் பிரதேச சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் வேலணை வடக்கு கிராம சேவகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அன்றைய தினம் புளியங்கூடல் சந்தியிலிருந்து ஊர்காவற்றுறை வரையான 780 ஆம் இலக்க பிரதான வீதியிலும் சிரமதானப்பணி நடைபெற்றது. ஊர்காவற்றுறை பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற சிரமதானப் பணியில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் பொது ஸ்தாபன பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்விரு வீதியிலும் நடைபெற்ற சிரமதானப் பணியில் கலந்து கொண்டவர்களுக்கு இலங்கை போக்குவரத்து சபையினர் சிற்றுண்டி வகைகள், குளிர்பானம் என்பவற்றினை வழங்கி சிரமதானப் பணியினை ஊக்குவித்தனர். (ஐ-ரீ)

## கருத்தரங்கு

வலிகாமம் கல்வி வலய பாடசாலை ஆசிரியர், மாணவர்களுக்கான சதுரங்க விளையாட்டுப் பயிற்சிக் கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற உள்ளது.

இப் பயிற்சிக் கருத்தரங்கில் ஒரு பாடசாலையில் இருந்து மூன்று மாணவர்களும் ஆசிரியரும் பங்குபற்றலாம் எனவும் —

கருத்தரங்கிற்கு வரும்போது சதுரங்கப் பலகை கொண்டு வரவேண்டும் எனவும்—

வலயக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா அறிவித்துள்ளார்.

# அல்பேனியர்கள் தாக்கப்பட்டால் 'நேட்டோ' தக்க பதிலடி கொடுக்கும்

## கிளின்ரன் எச்சரிக்கை

சான்பிரான்சிஸ்கோ மார்ச் 1

அல்பேனிய இனமக்கள் மீது யூகோஸ்லாவிய படைகள் தாக்குதல் மேற்கொள்ளுமாயின் நேட்டோ பதிலடி கொடுக்கும் என அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் எச்சரிக்கை விடுத்துள்ளார். யூகோஸ்லாவியத் தலைவர் சுலோபாதான் மில்லோசிவிக்கிற்கு விடுத்தவொரு செய்தியிலேயே இவ்வெச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இது கட்டுப்பாட்டுடன் நடக்கவேண்டியகாலம், அடக்குமுறைக்கான காலம் அல்ல என்பதை யூகோஸ்லாவியத் தலைவர் உணர்ந்து கொள்ள வேண்டும். சுலோபோ தான் அதனை உணர்ந்து கொள்ளாத பட்சத்தில் நேட்டோ அதனை உணர்த்தும் என பில் கிளின்ரனின் எச்சரிக்கை குறிப்பிடுகின்றது.

பாரிஸில் ஏற்படுத்தப்பட்ட இடைக்கால உடன்படிக்கையின்பின்னர் யூகோஸ்லாவியாவின் ராணுவப் படைப்பிரிவு கோசோவோவை நோக்கி நகர்த்தப்பட்டதன் விளைவாகவே அமெரிக்க ஜனாதிபதியின் எச்சரிக்கை வெளியாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச அவதானிகளின் தகவலின்படி யூகோஸ்லாவிய படையினர் அல்பேனிய கெரில்லாக்கள் இருப்பதாக சந்தேகிக்கப்படும் இருப்பிடங்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர் எனத் தெரியவருகிறது. யூகோஸ்லாவியப்படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தின் காரணமாக கிராமவாசிகள் தப்பியோடி விட்டனர் எனத் தெரிய வருகிறது.

பாரிஸ் பேச்சு வார்த்தையின் பயனாக அல்பேனிய, சேர்பிய பிரிவினரிடையே இடைக்கால உடன்படிக்கையொன்று கைச்சாத்தாகியுள்ளது. முழுமையானதொரு உடன்படிக்கை கைச்சாத்தாவதற்கு மேலும்பேச்சு வார்த்தைகள் தொடரும். மார்ச் மாதம் 15 ஆம் திகதி பேச்சுவார்த்தைக்கென நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## மனித கருவை நகல் எடுக்க பிரிட்டிஷ் குழு முயற்சி!

சூரிச், மார்ச் 1

''டோலி'' என்ற நகல் ஆட்டை உருவாக்கிய அறிவியல் நிபுணர் வில்முட் மனிதனின் நகலை உருவாக்கத் திட்டமிட்டுள்ளார்.

மனித கருவை நகல் எடுக்கும் இந்தப் பணியில் அவரது குழுவினர் ஈடுபடத் தொடங்குவர் என்று பி.பி.சி தெரிவித்தது. இது தொடர்பாக நிதி உதவி பெற வில்முட் ஒரு நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார் என்றும் பி.பி.சி தெரிவித்தது.

மனித கருவை நகல் எடுக்கும் திட்டத்தை செயல்படுத்த முடியும் என்ற நம்பிக்கை தமக்கு உள்ளது என்று எடின்பரோ நகரில் உள்ள ரோஸலின் ஆய்வு நிலையத்தில் பணியாற்றும் வில்முட் தெரிவித்தார்.

இந்த மனித கரு நகல் எடுக்கும் திட்டம் ஒரு மருத்துவ ஆய்வு பணிகளுக்காக மேற்கொள்ளப்படுகிறது. அமெரிக்காவின் ''ஜெரோன் காப்பரேஷன்'' என்ற நிறுவனம் இந்தத் திட்டத்துக்கு நிதி வழங்குகிறது.

அந்த நிறுவனம் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ரோஜர் பெடர்சென் என்ற ஆய்வாளர்களுக்கு இதே திட்டத்துக்காக நிதி உதவி வழங்கியுள்ளது. (ஐ-10)

### உலக அரங்கில்

## அதிபர் யெல்ட்சின் மருத்துவமனையில்

மொஸ்கோ, மார்ச். 1

ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ட்சின் மீண்டும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குடற்புண் நோய்த் தாக்கத்துக்கு உட்பட்டே அதிபர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடுமையான வேலைப்பளுவே அதிபரின் இந்நிலைக்கு காரணம் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

யெல்ட்சினின் உடல் நிலை முற்று முழுவதாகக் குணமடைந்து விட்டது என ரஷ்யப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (க)

## 25 க்கும் அதிக தமிழர்கள் உக்ரைனில் கடத்தல்

கீவ், மார்ச் 1

ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்வதற்காக உக்ரைன் சென்று தங்கியிருந்த வேளை குழு ஒன்றினால் கடத்தப்பட்டு பிறிதொரு இடத்தில் வைக்கப்பட்டிருந்த 25 க்கும் மேற்பட்ட தமிழர்கள் கடந்த வாரம் மீட்கப்பட்டுள்ளனர்.

முகவர்களுக்கிடையேயான கொடுக்கல் வாங்கல் பிணக்கு காரணமாகவே இவர்கள் மாற்றுக் குழுவினரால் கடத்தப்பட்டு அடைத்து வைக்கப்பட்டிருந்ததாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இக் கடத்தலுடன் தொடர்புடைய இரு முகவர்கள் பிடிபட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

உக்ரைன் நாட்டில் இத்தகைய சம்பவங்கள் பல நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-10)

## டாக்காவில் தீ அனர்த்தம் குடிசைகள் தீக்கிரை!

டாக்கா, மார்ச் 1

பங்களாதேஷில் நேற்று முன்தினம் ஏற்பட்ட பெரும் தீ விபத்தில் 5 பேர் வரை உயிரிழந்துள்ளதுடன் சுமார் 5ஆயிரம் குடிசைகள் எரிந்து நாசமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் டாக்காவிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அடுப்பு ஒன்றில் இருந்து பற்றி எரிந்த நெருப்பே இந்த விபத்துக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குடிசைகளில் பரவிய தீயை அணைப்பதற்கு தீயணைப்புப் படையினர் கடும் முயற்சி எடுத்தபோதும் அது பலனளிக்கவில்லை. (ஐ-க)

# சின்னஞ் சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

கல்லு வைக்காத தங்கப் பவுண் பதக்கம் நாச்சிமார் கோயிலடிக்கும், அரசடிக்கும் இடையில் தவறவிட்டது. கண்டு எடுத்தவர்கள் T. ஈசன் No. 579, K K S றோட் யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும்.

[63513]

திருமதி விக்கினேஸ்வரி நடராசா ஆகிய எனது விசேட அடையாள அட்டை இல. (0907013349) கடந்த 22-02-99 அன்று மல்லாகத்தில் இருந்து யாழ்ப்பாணம் பஸ்சில் பிரயாணம் செய்யும் போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நா. நடராசா நீலியம்பளை, மல்லாகம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும்.

[63528)

இல. 19, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பேர்னடின் அன்ரன் தங்ககுலசிங்கம் என்பவரது விசேட அடையாள அட்டை கடந்த 21-02-99 அன்று யாழ். கன்னியர்மடம் மகா வித்தியாலயத்துக்கும், யாழ். ஆசனக் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இ. அன்ரன் இல. 368/11, பிரதான வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(63523)

கச்சேரி நல்லூர் றோட் 39/6, மூத்தவிநாயகர் வீதியைச் சேர்ந்த இராசநாயகம் பிரசாந் என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல. 0902009923) அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலைக்கும் வியாபாரி மூலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து அல்வாய் வடக்கு திருத்தணி கொமினிகேஷனில் ஒப்படைக்கவும்.

(63526)

### வினாத்தாள்

கொழும்பு பிரபல ஆசிரியர் P. அம்பிகைபாகனின் ஆண்டு 5 புலமைப்பரிசில் வினாத்தாள் விற்பனையாகின்றது. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

(63518)

### விற்பனைக்கு

புத்தம் புதிய Lancer Honda-50. Self Start மோட்டார் சயிக்கிள் விற்பனைக்குண்டு. சஜிபன் பல்பொருள் வாணிபம், பிரதான வீதி, பண்டத்தரிப்பு. (63517)

பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் கோயில் வடக்கு வீதிக்குள்ளாகி இருக்கும் புளியமரம் விற்பனைக்குண்டு. தேவைப்படுவோர் நேரில் ஆலயத்தில் வந்து தர்மகர்த்தாவுடன் தொடர்பு கொள்ளவும்.

(63514)

நல்ல நிலையில் உள்ள Hoover Floor Polisuer, Pifco Super Dryer + 8 மற்றும் வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு, இல. 143, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(63487)

யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் வீதியில் யாழ்/கச்சேரியில் இருந்து 200 யார் தூரத்தில் 3 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: கொள்ள வேண்டிய முகவரி தி. திருநாவுக்கரசு ஓய்வுபெற்ற தபாலதிபர் 55, கச்சேரி, நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல. யாழ்/ 2340. (63525)

### இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.

(63490)

### நுண் அறிவு வகுப்பு

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள எழுதுவினைஞர் பரீட்சைக்குத் (Clerical) தயாராகப் பயிற்சி வகுப்புகள் 03-03-99 அன்று ஆரம்பமாகின்றன. ஆசிரியர்: க. கனகலிங்கம், (SLAS) ஆடியபாதம் வீதி, அரசடி அம்மன் கோயில் முன்பாக திருநெல்வேலி. (63500)

### திருத்துதல்

சகல கமரா வகைகளும், எலக்ரோனிக் பிளாஷ், மூக்குக்கண்ணாடி ஒட்டுதல், புகைப்படத்துறை துணைச் சாதனங்களும் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: சு. நாராயணசாமி, 301, கஸ்தூரியார் வீதி, (மேல் மாடி), கன்னாதிட்டிச் சந்திக்கு அருகில். (63447)

### மணமகன் தேவை

A/L சித்தியடைந்த 21 வயது நிரம்பிய 7இல் செவ்வாயுள்ள இந்து கௌரவ குடும்பப் பெண்ணுக்கு மணமகன் தேவை. மணமகன்வடமராட்சிப்பகுதியில் இருத்தல் வேண்டும். ஜாதகம் மற்றும் விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 851, மே/பா உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(63498)

### சிங்களம்

பேச, எழுத, வாசிக்கவும் புதிய பாடத்திட்டத்திற்கு அமைய எதிர்வரும் O/L பரீட்சைக்கு தயாராகவும் (தமிழ் மொழி மூலம்) கற்பிக்கப்படும். ஆசிரியர்: எஸ். லீலா கிருஷ்ணன். (ஆரம்பம் இன்று மாலை 3.30 மணி) ஆடிய பாதவீதி, அரசடி அம்மன் கோயில் முன்பாக நெல்திருவேலி. (63499)

## தவறிவிட்டது

தேவாலயவீதி சங்கானையைச் சேர்ந்த ஜெயபாலன் சோபன்ராஜ் என்பவரது தேசிய அடையாள அட்டை இலக்கம் (782090410V) மற்றும் விசேட அடையாள அட்டை கடந்த 27-2-99 அன்று சுழாவடிக்கும், தட்டாதெருவுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ். K. K. S. வீதியிலுள்ள ஆனந்தா அச்சகத்தில் அல்லது மேற்கண்ட முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(63527)




(சி/6492)

# பாடசாலைக் கட்டட திருத்த வேலைக்கு நிதி

தென்மராட்சி, மார்ச் 1

பளை வேம்பொடுகேணி சி. சி. த. க. பாடசாலை வகுப்பறைத் தொகுதிகளின் திருத்த வேலைக்கென வடபகுதி புனர்வாழ்வு, மீள்குடியமர்வு அதிகாரசபைத் தலைவர் என். கே. ஒபடகே இரண்டு லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

இப்பாடசாலையில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயத்தினால் அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடத் தொகுதி திறப்பு விழாவுக்கு கடந்த வாரம் வருகை தந்திருந்த வடபகுதி புனர்வாழ்வு மீள்குடியமர்வு அதிகாரசபையின் தலைவர் என். கே. ஒபடகே, பொது முகாமையாளர் எம். வாமதேவா ஆகியோர் பாடசாலையின் ஏனைய வகுப்பறைகளைப் பார்வையிட்டபின் கொழும்பு திரும்பி இருந்தனர்.

இப் பாடசாலைகளின் வகுப்பறைகளைத் திருத்தியமைக்கவென இரண்டு லட்சம் ரூபாவினை வழங்கவுள்ள தாவல் 'பக்ஸ்' மூலம் யாழ். அரச அதிபர் க. சண்முகநாதனுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

வகுப்பறைக் கட்டடத் திருத்த வேலைகளுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டதும் வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பாடசாலை அதிபர் சி. இராமலிங்கம் தெரிவித்தார்.

(ஐ—117)

## நற்செய்திப் பெருவிழா

வடமராட்சி, மார்ச் 1

யாழ். கிறிஸ்தவ ஒன்றியம் நடத்தும் நற்செய்திப் பெருவிழா நாளையும், நாளை மறுதினமும். அடுத்த நாளும் யாழ்ப்பாணம் பரிசுத்த பேதுரு மெதடிஸ்த ஆலய றிம்மர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வணக்கத்துக்குரிய ஜே. விவேகநாதன் இந்த நற்செய்திப் பெருவிழாவில் அருளுரையாற்றுவார்.

(ஐ-173)

## பணிப்பெண் தேவை

பாரிசவாதத்தினால் பீடிக்கப்பட்டு கொழும்பில் வசிக்கும் பெண்மணியைப் பராமரிக்க அனுபவம் வாய்ந்த பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்க்கப்படும். பூரண விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**லோ. ஜெயநாதன், 136, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

(நேரில் தொடர்புக்கு ஞாயிறு காலை.) (63503)

## Siva Link Communication
## சிவ லிங் கொமினிக்கேஷன்

**உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத்தொடர்புகளை உடனுக்குடன் குறைந்த கட்டணத்தில் தாமதமின்றிப் பெற்றுக்கொள்ளலாம்.**

**மிக முக்கிய அறிவிப்பு**

"அமைதியான சூழலில்,
அத்துடன் ஆசனத்தில் அமர்ந்து,
ஆறுதலாகவும், அந்தரங்கமாகவும்
தொடர்பு கொள்ளலாம்"

48, விதானையார் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(சுண்டுக்குளி மகளிர் கல்லூரியிலிருந்து கொழும்புத்துறை வீதியில் வரும் இரண்டாவது வலது பக்க வீதிச் சந்தியிலிருந்து 100 யார் தூரம்)

**உள்ளூர் இலக்கம்:** 021 - 2607

**வெளிநாட்டிலிருந்து தொடர்புகொள்ளவேண்டிய இலக்கம்:** 0094 - 21-2607

(63529)

யா/ குட்டியப்புலம்

## அ. த. க. பாடசாலை

வயாவிளான்

## வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி - 1999

**இடம்:** பாடசாலை மைதானம்

**காலம்:** 01 - 03 - 1999 திங்கள் காலை 9 மணி

தலைவர்: உயர்திரு. செ. கந்தசாமி (அதிபர்)

பிரதம விருந்தினர்: திருமதி ப. திலகநாயகம்போல் (பிரதேச செயலர், வலி. வடக்கு)

சிறப்பு விருந்தினர்:

உயர்திரு. ஆ. வ. கணேசலிங்கம் (உதவிக் கல்விப் பணிப்பாளர் வலயம் வலிகாமம் - III)

கௌரவ விருந்தினர்கள்:

உயர்திரு. ஆ. சி. நடராசா (அதிபர், யா/ வயாவிளான் ம. ம. வி.)

உயர்திரு. சு. தர்மகுலசிங்கம் (கிராமசேவையாளர், வயாவிளான் கிழக்கு)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

(சி/6646)

# ஆஸ்பத்திரியால் வெளியேறும் வரை

# நோயாளிக்கு தாதியரே பொறுப்பு

## பணிப்பாளர் சுற்றறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச்.1 ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படும் நோயாளர்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நேரத்தில் இருந்து துண்டுவெட்டி வெளியேறும் வரை அந்தவார்ட்டில் கடமையில் இருக்கும் தாதிய உத்தியோகத்தர்களேநோயாளருக்குப் பொறுப்பாளி ஆவார். இந்தக் காலவேளையில் நோயாளிக்கு ஏதாவது அசம்பாவிதம் நிகழ்ந்தால் அந்த வேளையில் அந்த வார்ட்டுக்குப் பொறுப்பாகக் கடமையாற்றும் தாதி உத்தியோகத்தர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறான சுற்றறிக்கை ஒன்று யாழ். போதனாவைத்தியசாலையில் கடமை புரியும் தாதி உத்தியோகத்தர்களுக்கு வைத்தியசாலைப் பணிப்பாளரினால் அனுப்பப்பட்டுள்ளது.

யாழ். வைத்திய சாலையில் சிகிச்சைக் குட்படுத்தப்பட்ட நோயாளர் இருவர் ஆஸ்பத்திரி வார்ட்டில் சிகிச்சை பெற்ற வேளைவிழுந்துமரணமானதை அடுத்தும்—

வார்ட்டுகளில் இருந்து காணாமற் போனது மற்றும் சில சம்பவங்களினால் மரணமானது ஆகியவற்றை அடுத்துமே — இந்தச் சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டது.

இதற்கிடையில் யாழ் ஆஸ்பத்திரியில் தாதியர் பற்றாக்குறை நீண்டகாலமாக நிலவி வருவதாகவும்—

சராசரி 6 நோயாளிகளுக்கு ஒரு தாதியர் கடமையில் இருக்க வேண்டும் என்ற நிலைமை இருந்தும் இங்கே 50 நோயாளிகளுக்கு ஒரு தாதியர் கூட கடமையாற்ற முடியாத அளவுக்கு தாதியர் பற்றாக்குறை நிலவி வருவதாகவும் தாதியர் வட்டாரத்தில் பேசப்படுகிறது.

(இ)

## கண்ணீர் அஞ்சலி

திரு. ச. இரவீந்திரநாதன்
(முதன்மை ஆசிரியர் - விஞ்ஞானம் - யாழ். வலயம்)
அவர்களின் அன்புத் தந்தையார்

### செல்லையா சண்முகராசா

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
(சி-6640) கொக்குவில் இந்துக் கல்லூரி.


## மருத்துவம்

குழந்தைகள் மருத்துவம், கண், காது, மூக்கு, தொண்டை, பல் மருத்துவம், கர்ப்பவதிகள் பரிசோதனையும் மருத்துவமும், வாதம் சம்பந்தப்பட்ட ரோகங்களுக்குரிய கரண்ட் பிடித்தல், சிறுநீர், இரத்தம், மலம் பரிசோதனைகள், இரக்த அழுத்தம், நாடித்துடிப்பு ஒரே நேரத்தில் DIGITAL ELECTRONIC BLOOD PRESSURE MONITOR மூலம் பரிசோதனைகளும், ஆலோசனைகளும் இலவசம்.

நெடுந்தீவு, புங்குடுதீவு உட்பட சகல தீவக மக்களுக்கும் அன்றும், இன்றும் தன்னிகரில்லாச் சேவையினை வழங்கி வருகின்றது.

### இரெட்ணம் வைத்தியசாலை

129, ஸ்ரேசன் றோட் — யாழ்ப்பாணம்.

[ இலங்கைப் பல்கலைக்கழக மருத்துவக் கலாநிதிப் பட்டம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. ]
(63424)


## குப்பி விளக்கு தட்டுண்டு ஒருவர் காயம்

சுவரில் எரிந்து கொண்டிருந்த குப்பி விளக்கு தட்டுண்டு அருகில் இருந்தவரின் தலை மேல் விழுந்து தீப்பற்றி எரிந்ததில் ஒருவர் காயமடைந்தார்.

நாவற்குழிப் பகுதியில் கடந்த வெள்ளி இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பூபாலசிங்கம் வசந்தராசா (வயது 30) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

## வீதி விபத்தில் மேலும் மூவர் காயம்

யாழ். குடாநாட்டுப்பகுதில் தொடர்ந்து இடம்பெற்று வரும் வீதி விபத்துக்களில் காயமடைந்து கடந்தவெள்ளியன்றும் மூவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

தென்மராட்சிப் பகுதியில், மந்துவில்,வரணி வீதியில், இடம்பெற்ற டிராக்டர் மோட்டார்சைக்கிள் விபத்தில், மோட்டார்சைக்கிளில் சென்றவர்களான சங்கத்தானையைச் சேர்ந்த குமாரசிங்கம் பரராமசிங்கம் (வயது60) அவரதுமனைவிபரராமசிங்கம் புஸ்பபூபதி (வயது 56) ஆகிய இருவரும், உரும்பிராயில் இடம்பெற்றவீதிவிபத்தொன்றில் எஸ். ஸ்ரீஸ்காந்தராசா (வயது 30) எனபவருமே காயமடைந்தவர்களாவர். [இ-15]


## தென்னையில் ஏறியவர் விழுந்து காயம்

தேங்காய் பிடுங்குவதற்காக மரத்தில் ஏறியவர் தவறி விழுந்து காயமடைந்தார்.

பளை, முகமாலையில் இரு நாள்களுக்கு முன் இடபெற்ற இந்தச்சம்பவத்தில்திருநாவுக்கரசு உதயகுமார் (வயது 24) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் பளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக, யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (இ—15)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் அப்பாப்பிள்ளை சிதம்பரநாதன்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 – 09 – 1924 | 12 – 03 – 1998 |

திதி: 01 - 03 - 99

விண்ணவர் நாடேகி
ஆண்டொன்று சென்றதையா
கண்மணிபோல் காத்திடுவீர்
கடுமையாய்ப் பேசமாட்டீர்
எண்ணரிய பிறவிகளில் உம்மை
இனி நாம் காண்பதெப்போ!
கண்ணுறக்கமின்றி கலங்குகிறோம்.
புண்ணியனே குலவிளக்கே எம் ஆசை அப்பாவே!

உங்கள் பிரிவால் துயருறும்
அன்புள்ள மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மஞ்சத்தடி,
முருகன் கோயில் வீதி,
இணுவில்.
(63495)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் சின்னத்தம்பி தனபாலசிங்கம்

(இளைப்பாறிய இ. போ. ச நடத்துநர்)


| அன்னையின் மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 10—01—1934 | 30—01—1999 |

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட அன்புத் தெய்வமே! என்றும் எம் மனதில் நிலைத்திருக்கும் உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மைத்துனர், மைத்துனிமார்.

மூத்தவிநாயகர் கோவிலடி,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.
(63458)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

### தாமோதரம்பிள்ளை தனபாலசிங்கம்

(கிராம அலுவலர்)

| ஆண்டவன் படைப்பில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 13 – 02 – 1951 | 30 – 01 – 1999 |

அன்பான எம் திரு உருவே! நீர் எமை எல்லாம் துன்பத்தில் தவிக்கவிட்டு தொலைதூரம் சென்ற மாயந்தான் என்னவோ! எமது குடும்பத்தலைவரின் மறைவு கேட்டு பல வழிகளிலும் உதவி செய்து துயரில் பங்கு கொண்ட சகல உற்றார், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் கோப்பாய் பிரதேச செயலர் அவர்கட்கும் பிரதேச செயலக ஊழியர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (01 - 03 - 1999) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

3 ஆம் கட்டை,
கட்டைப்பிராய்,
கல்வியன்காடு,
(63485)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 19 — 01 — 1948



மறைவு 01 — 02 — 1999

## வியாகேசு யோகராஜ்

(ஆசிரியர் யா/ யார்க்கரு விநாயகர் வித்தியாலயம் வானம்பாடி வில்லிசைக்குழுவின் நாயகன்)

நாளை 02 — 03 — 1999 செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திக்கிரியைகளில் பங்கு கொண்டு அவர் நினைவாக நிகழும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர். நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


நன்றி!

மனைவி இராஜேஸ்வரி,
(ஆசிரியை)
பிள்ளைகள்:
தினேஸ்குமார்,
[மாணவன் யா/ ஹாட்லிக்கல்லூரி
தரம் 11 பருத்தித்துறை]
ஹம்சானந்தி.
[மாணவி, யா/ மெதடிஸ்த பெண்கள்
உயர்தர பாடசாலை, தரம் 6
பருத்தித்துறை]

கிழவி தோட்டம்,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

(63421)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

## செல்லத்துரை தயாளரூபன்

( யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி )

கனிவு 01 — 04 — 1981

உதிர்வு 30 — 01 — 1999

கடவுட் குழந்தை எனக் கங்குலிலும்
காத்து நின்றோம்
கடவுள் தான் கடைசி எனக் காட்டி
விட்டாய் நீ எமக்கு
கானமழை காண விழைந்தவனே
காலனின் கண்ணில் பட்டதுமேனோ
காணாத கனவாக நாம் நினைத்தும்
நிஜமாக முடிந்ததுவே உன் மறைவு
கரையில்லாக் கடல் போல கண்ணீரில்
நாம் கரைந்தும்
உருவில்லா உன் உருவம் எம்முடனே
வாழுதையா.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

— குடும்பத்தினர்.

சேச் லேன்,
உடுப்பிட்டி.

(63452)

# தட்டச்சு வகுப்பு

தென்மராட்சி, மார்ச். 1

பளைப் பிரதேசத்தில் பாடசாலையை விட்டு வெளியேறிய இளைஞர், யுவதிகளுக்கான தமிழ், ஆங்கில தட்டச்சு பயிற்சி வகுப்புகள் பிரதேச செயலகத்தினால் மார்ச் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விரும்பும் இளைஞர், யுவதிகள் விண்ணப்பத்தினை பிரதேச செயலக திட்டமிடல் பிரிவில் ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி அறிவித்துள்ளார். (ஐ–117)

# சிலாபத்தில் 20 பேர் கைது

கொழும்பு, மார்ச். 1

பல குற்றச் செயல்கள் தொடர்பாக கடந்த நான்கு ஆண்டுகளாக பொலீஸாரால் தேடப்பட்டு வந்த 20 பேரை சிலாபம் பொலீஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

கொலைகள் உட்பட பல்வேறு குற்றச் செயல்களில் இவர்களுக்குத் தொடர்பிருப்பதாக சிலாபம் பொலீஸார் தெரிவித்தனர்.

சிலாபம் மாவட்ட நீதிபதி 1994 ஆம் ஆண்டு இவர்களைக் கைது செய்வதற்கான பிடிவிறாந்தைப் பிறப்பித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ–6)

# பாலர் ஆசிரியராக பயிற்சி

தகைமை
க. பொ. த
சாதாரண தரம்
அல்லது மேல்.
தபாலில் ஆறுமாதங்களில் பயிலலாம்.

பாலர் ஆசிரியர் சங்கம்,
கொக்குவில்.

(63430)

# வாழ்த்துகின்றோம்

கரம்பன் கிழக்கு கிராம உத்தியோகத்தர்

## திரு. க. சகாதேவன்

அவர்கள் பரீட்சையில் சித்தி எய்தியதன் மூலம் தரம் 1 இற்கு பதவி உயர்வு பெற்றுச்சென்றதையிட்டு நாம் எமது மகிழ்ச்சியையும், பாராட்டுக்களையும் தெரிவிப்பதுடன் அவரது சேவை எமக்கு மீண்டும் கிடைக்க இறைவனை வேண்டுகின்றோம்.

கரம்பன் கிழக்கு, (யா/52) மக்கள்.

(63522)

# அந்தியேட்டி அழைப்பு

அமரர்

## மாணிக்கம் சிவகுமாரன் (சிவா)

(சிவா ஸ்ரோர்ஸ் உரிமையாளர், பருத்தித்துறை)

அவர்களின் அந்தியேட்டி வைபவம் நாளை (02. 03. 99) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திக்கான இவ் வைபவத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

குடும்பத்தினர்

வராத்துப்பளை,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(63459)

# இதய அஞ்சலி

எமது தாபனத்தின் முக்கிய உறுப்பினரும்,
நெடுந்தீவு மகாவித்தியாலய முன்னாள் அதிபரும்,
நெடுந்தீவு கல்விக் கோட்டத்தின் முன்னாள்
உதவிப் பணிப்பாளருமான

## P. M. J. அன்ரனி

(B. Sc. Dip. in Ed.)

அவர்களின் மறைவு குறித்து அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர்,
செயற்குழு பொதுச்சபை உறுப்பினர்கள்,

தனிநாயகம் அடிகளார்,
சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம்,
நெடுந்தீவு.

(63521)

யாழ். வண்ணை - கன்னாதிட்டி

# அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்

# ஆலய புனர்நிர்மாண வேலைகள்

அன்புடையீர்!

திருவண்ணை நகரின் அடியார்கள் குறைநீக்கி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் அருள்மிகு அன்னை காளியம்பாளின் ஆலய புனர்நிர்மாண வேலைகள் தொடங்குவதற்கு அன்னையின் அருள் கிட்டியுள்ளது. எதிர் வரும் வெகுதானிய வருடம் பங்குனித் திங்கள் 5 ஆம் நாள் வெள்ளிக்கிழமை (19 - 03 - 1999) பாலஸ்தாபனம் நடைபெற்று தொடர்ந்து ஆலய புனரமைப்பு வேலைகள் நடைபெறவுள்ளது. ஆகவே அம்பிகையின் அடியார்கள் இந்த நற்பணியில் பங்குபற்றி தங்களால் இயன்ற பங்களிப்பைச் செய்து அம்பாளின் இஷ்டசித்திகளைப் பெறும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம்.

வங்கி சேமிப்பு கணக்கு இல: S/A 100061, மக்கள் வங்கி, கன்னாதிட்டி கிளை, யாழ்ப்பாணம்.

## திருப்பணி வேலைகள்

1. மகாமண்டப கூரை வேலை
2. கோபுர சிற்பங்களுக்கு வர்ணம் தீட்டுதல்
3. வாகனங்களைத் திருத்துதல்
4. கோயில் உள்நில வேலைகள்
5. மின்சார வேலைகள்
6. தேர்க் கொட்டகை
7. கிழக்கு வாசல் மண்டபம்
8. நீர்த்தொட்டி அமைத்தல்
9. கோயில் சுற்று மதில் எல்லைச் சுவர் கட்டுதல்
10. மற்றைய திருப்பணி வேலைகளும்

இங்ஙனம்
தேவஸ்தான ஆதீன கர்த்தாக்கள்

விளம்பர அன்பளிப்பு
கணேசா நகையகம்
194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(63466)

# உதயன்

## அவநம்பிக்கை உறுதியாகிறது

சுமார் ஒரு வருடத்தின் பின்னர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவும் கடந்த வியாழக்கிழமை சந்தித்துப் பேசினர்.

எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி — இன்னும் ஒரு மாத காலத்தில்—நடைபெறவுள்ள ஐந்து மாகாண சபைகளுக்கான தேர்தலை வன் முறை இல்லாத தேர்தலாக நடத்துவது குறித்து ஆராய்ந்து, நடவடிக்கை எடுப்பதே சந்திப்பின் பிரதான நோக்கம்.

நீதி நியாயமான தேர்தலை நடத்துவதற்கு அதில் பங்குகொள்ளும் சகல கட்சிகளின் பிரதிநிதிகளையும் கொண்ட உயர்மட்டக் கண்காணிப்புக் குழுவை நியமிப்பது என அந்தச் சந்திப்பின்போது முடிவு செய்யப்பட்டது.

அத்தோடு, தேர்தல் ஆணையாளருக்கு முழு அளவிலான அதிகாரம் வழங்குவதன் பொருட்டு தேர்தல் சட்ட விதிகளில் திருத்தம் கொண்டு வருவதற்கு ஒத்துழைக்கவும் எதிர்க்கட்சி இணங்கி உள்ளது.

மொத்தத்தில், வன்முறைகள் இல்லாமல் நீதி நியாயமான தேர்தலை நடத்தும் பிரதான நோக்கம் எய்தப்பட்டுள்ளது.

ஜனநாயகத்தின் மூலவேரான, சுதந்திரமான, அமைதியான தேர்தலை உறுதிப்படுத்த முடிவு செய்யப்பட்டிருப்பது தென்னிலங்கை மக்களுக்குக் கிடைத்த ஒரு வெற்றியாகும்.

ஆனால் இதே அணுகுமுறையை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதிலும் தென்னிலங்கைத் தலைவர்கள் கைக்கொள்ள வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும் தமிழர்களின் இந்த எதிர்பார்ப்பு கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகவே தொடர்ந்து நிராசையாகியே வருகிறது.

இனப்பிரச்சினைக்கும் நியாயமான, நீதியான தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் என்பதில் எவருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆனால் தமிழர்களுக்கு, அவர்களின் போராட்டத்துக்குப் பதிலாக என்னென்ன உரிமைகளை எந்தெந்த வடிவங்களில் வழங்குவதற்குத் தயார் என்பதில் ஆளுங்கட்சியும் பிரதான எதிர்க்கட்சியும் ஓர் இணக்கப்பாட்டுக்கு வருவது அவசியம்.

அந்தப் பணியைச் செய்வதற்கு இத்தனை வருடங்களின் பின்னரும், நாட்டிற்கு உண்டான பலவகை அழிவுகளின் பின்னரும், மேற்குறிப்பிட்ட இரு சாராரும் இன்னும் முன்வரவில்லை. தேர்தல் விடயத்தில் ஒத்துழைத்தது போல ஒத்துழைப்பர் என்பதற்கான அறிகுறி தானும் இல்லை.

''இனப்பிரச்சினை தொடர்பாக அரசியல் கட்சிகள் மத்தியில் பலதரப்பட்ட கருத்து முரண்பாடுகள் இருக்கின்றன'' என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா வியாழக்கிழமை சந்திப்பின் பின்னர் விமர்சித்திருப்பது இது விடயத்தில் தெற்குப் பக்கத்தில் திருப்பம் வராது என்ற அவநம்பிக்கையையே உறுதிப்படுத்துகிறது.

# கொழும்புக்கு பயணிகளை களவாக அனுப்பும் ஏஜென்ஸிகளால் ஏமாற்றப்படும் பொதுமக்கள்

## வவுனியாவில் சூடு பிடிக்கும் சட்டவிரோத 'பிஸ்னஸ்'!

ரா. இளவரசன்

நேற்றைய உதயனின் சூரியகாந்திப் பகுதியில் வெளியான வவுனியா மடலின் எஞ்சிய இறுதிப் பகுதி இங்கு பிரசுரமாகுகிறது.

வவுனியாவில் பிரயாணப் 'பாஸ்' வழங்குவதற்கு வவுனியா ரயில் நிலையத்திற்கு பின்புறமாக — சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்க வளவினுள் — உள்ள ஒரு பகுதியில் இதற்கென ஓர் அலுவலகம் அமைக்கப்பட்டுளளது. இது முன்னர் ஒரு கோழிப்பண்ணையாக இருந்தது. இதனால் இதனை மக்கள் கோழிக் கூட்டு முகாம் என்றே அழைக்கின்றனர். ஆனால் அதற்குரிய பாதுகாப்புத் தரப்புப் பெயர் 'சனசு' முகாம் ஆகும். அங்கே ஒரு பொலீஸ் பொறுப்பதிகாரியுடன் பல பொலீஸாரும் சில சிவில் அலுவலர்களும் கடமையாற்றுகின்றனர்.

அரச ஊழியரான ஒருவர் கொழும்பு செல்ல வேண்டுமாயின் அவர் தனது பயணத்திற்கான வலுவான காரணத்தையும் தொழில் அத்தாட்சியையும, தனது மேலதிகாரியின் கடிதங்களையும் இந்த 'சனச'முகாமில் காட்டி அனுமதியைப் பெறலாம். அலைச்சல் அதிகம் தான்; பல்கலைக்கழக மாணவர்களாயின் அரச அதிபரைச் சந்தித்து கடிதம் பெற்று விண்ணப்பத்துடன் கொடுத்தால் அனுமதி கிடைக்கும். ஆனால் இந்த நடைமுறை தெரியாமல் பலர் பல்கலைக்கழக அனுமதியையே இழந்த கதைகளும் உண்டு. நோயாளியாயின் வைத்திய அதிகாரியின் அறிக்கையைக் காட்டி அனுமதி பெறலாம், நோயாளருடன் கூடச் செல்லும் நபருக்கு 'நோ சான்ஸ்'; கைக்குழந்தை ஒன்றை அநுராதபுரம் வைத்திய சாலையில் சிகிச்சைக்காக கூட்டிச் சென்று - சிகிச்சை பலனளிக்காமல் போய் குழந்தை இறந்த போது அதனை கவனிக்க -முடியாது பாஸ் இல்லாத நிலையில் வைத்தியசாலை ஊழியர்களால் விரட்டப்பட்டு அநுராதபுரம் வைத்தியசாலையில் பிள்ளையின் பிணத்தைக் கைவிட்டுவிட்டு வந்த தாயின் நிலை அனைவரும் அறிந்ததே.

இவர்கள் எல்லோரையும் விட அடுத்த பிரிவினர் சாதாரண மாணவர்கள். உறவினரைச் சந்திக்க, வெளிநாடு போக அல்லது விடுமுறையை ஜாலியாகக் கொண்டாட போன்ற ஏதோ ஓர் இன்னோரன்ன காரணத்திற்காக கொழும்பு செல்ல முயல்பவர்கள்.

இவர்கள் நிலைதான் படு பரிதாபமானது. விண்ணப்பம் ஒன்றை நிரப்பி கிராம சேவகரின் உறுதிப்படுத்தலுடன் சனசு முகாமில்கொடுக்க வேண்டும். கொடுத்த பின் அங்குள்ள பொலீஸாரும், சி. ஐ. டீயினரும் ஏகப்பட்ட கேள்விகள் கேட்பார்கள். கேட்ட கேள்விகளுக்கு 'சொதபாமல்' பதில் சொன்னால் அடுத்துவிண்ணப்பம்பொலீஸ் அத்தியட்சகரிடம் போகும். அங்கேஅருந்தவம் புரிந்துஒரு கையொப்பத்தை வாங்கிக கொண்டு மீண்டும் புலனாய்வுத்துறைக்கு வரும். புலனாய்வுத்துறையினர் வவுனியாவில் விண்ணப்பித்தவரின் வீட்டுக்குப் போய்ப் பார்த்து. விசாரித்து விவரம் எடுப்பர். அதே வேளை கொழும்பிலே சென்று தங்கப்போகும் விலாசத்துக்கும் ஒரு புலனாய்வுக் குழு போய் விசாரிக்கும். விசாரணைகள் திருப்திகரமாக இருந்தால் அடுத்து விண்ணப்பதாரருக்கு பாஸ் வழங்குதல் தொடர்பாக அறிவிக்கப்படும். அதன்பின் அவர்கள் வவுனியாவில் நிரந்தரமாக வசிக்கும் ஒருவரைக் கூட்டி வரவேண்டும்.

கொழும்பு செல்லும் நபர் எந்தப் பிரச்சினையும் இல்லாதவர் அவர் ஏதாவது பிரச்சினைக்குரியவரானால் அதற்கு நான் பொறுப்பேற்கிறேன் என அவர் கையொப்பம் வைத்துக் கொடுக்க வேண்டும். இவ்வளவு நடைமுறைகளுக்கும் பின்னரே அவர்களுக்கு கொழும்பு சென்று ஒரே ஒரு வாரம் தங்க அனுமதி வழங்கப்படும். ஒரு வாரத்தின் பின் மேலதிகமாக ஒரு நாள் தாமதித்தால் கூட பயணி கம்பி எண்ண வேண்டி இருக்கும். அட ஒரு வாரத்திற்கா இவ்வளவு கெடுபிடி?

சரி நிரந்தரமாகப் போய்க் கொழும்பிலே குடியேறுவதாயின் என்ன நடைமுறை? என்று நீங்கள் கேட்பது விளங்குகிறது. மன்னிக்கவும் நடக்க முடியாத விடயங்கள் பற்றி எழுத வேண்டிய அவசியம் என்ன?

சரி இவ்வளவு கெடுபிடிகளின் மத்தியில் புலிகள் கொழும்பு செல்ல முடியாது தானே. அதனால் புலிகளின் கொழும்புப் பயணம் தடைப்பட்டுவிட்டது உண்மையானால் அண்மையில் பிஸ்டல் குழு உறுப்பினர்கள் என்றும், புலி உறுப்பினர்கள் என்றும் சிலர் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் பலர் சுடப்பட முன்னரே சயனைட் அருந்தி தற்கொலை செய்து கொண்டனர். அவர்களை இராணுவம் சோதித்த போது அவ்வாறு கொல்லப்பட்ட அனைவரும் வவுனியாவில் நிரந்தரமாகத் தங்குபவர்களுக்குரிய பாஸையே வைத்திருந்திருக்கிறார்கள். இதிலிருந்து கிடைக்கப் பெறும் நீதி யாதெனில் இந்த பாஸ் கெடுபிடிகளால் பாதிக்கப்படுபவர்கள்அப்பாவி மக்களேயன்றிப் புலிகளல்ல என்பதாகும்.

இவ்வாறன கெடுபிடிகள், அலைச்சல்கள், ஏமாற்றங்களின் மத்தியில்தான் இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்ட கொழும்புக்கு ஆள்களை அனுப்பும் வியாபாரம் ஆரம்பமாகிறது.

ஏகப்பட்ட அலைச்சல்களின் பின் ஏமாறி அடுத்து என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருப்பவர்களை அதிலும் அவர்கள் கொஞ்சம் 'பசை' உள்ளவர்களா எனப்பார்த்து அவர்களை அண்டும் சிலர் அவர்களைக் கூட்டிச் சென்று கொழும்பிலே விட்டு பொலீஸ் பதிவும் எடுத்துக் கொடுத்து ஒரு தொகைப் பணத்தைப் பேரம் பேசி வாங்கிக் கொள்வர். இவ்வளவு கடுமையான பாதுகாப்புகளுக்கு மத்தியில் எப்படிக் கூட்டிச் செல்கிறார்கள் என்ற சந்தேகமும் எழத்தான் செய்யும்.

### ஓட்டோ பயணம்

வவுனியாவில் ஓர் ஓட்டோவை வாடகைக்கு அமர்த்தி அது செட்டிகுளம் ஊடான காட்டுப்பாதைகள் ஊடாகச் சென்று மதவாச்சியை அடையும். அங்கிருந்து தொடர்ந்து பஸ் பயணம். அல்லது வவுனியாவின் கிழக்குப் பகுதியூடாகச் சிதம்பரபுரம், மைத்திரிபுரம் ஊடாகச் சென்று சிங்களப்பகுதி வழியாகத் தொடர்ந்து பஸ்ஸிலே செல்ல முடியும். இது தரக்கண்டி வீதியால் நேரடியாகவே கூட்டிச் செல்கிறார்கள். இதற்கு ஈரப் பெரியகுளம் சோதனைச் சாவடியிலுள்ள சிலரைக்கவனிக்கவேண்டியது அவசியம். இது தவிர சட்ட விரோத பாஸ் மூலம் அனுப்புதல் மற்றும் இதுபோன்ற பல்வேறு பட்ட வழிகளில் தினமும் ஏராளமானவர்கள் அனுப்பப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல- ப்படி அனுப்பப்பட்டவர்களில் அரைவாசிப் பேருக்குமேல் அனுப்பப்படும் போது இடைவழியிலும் அல்லது அனுப்பப்பட்டு கொழும்பிலே நடமாடும் போதும் கைதாகி சிறையிலே இருக்கிறார்கள். இதுபற்றி தினமும் பத்திரிகைகளில் செய்திகள் வெளிபாகிக்கொண்டே இருக்கின்றன. ஆயினும் இன்றும் பலர் கொழும்பு செல்ல யாரைப் பிடிக்கலாம் என்று வவுனியாவில்அலைந்து கொண்டே இருக்கிறார்கள்.

இந்த 'பயண ஏஜென்ஸி' தொழிலில் போட்டி அதிகரித்துவிட்டது. இதனால் வெளிநாடு செல்வதற்காகச் சென்ற பல இளைஞர்களும், திருமணம் முடிக்கச் சென்ற பல யுவதிகளும் தாங்கள் சென்ற காரியம்கை கூடாமல் இடை வழியில் கைதாகிப் பொய்க்குற்றம் சாட்டப்பட்டு மாதக்கணக்கில் சிறைகளில் வாடுகிறார்கள்.

### படையினருடன் தொடர்பு?

ஆனால் இவர்களைக் கூட்டிச்சென்ற 'ஏஜென்ஸிக்காரர்கள்' (கொழும்புக்கு ஆள்களை ஏற்றுபவர்களை ஏஜென்ஸி காரர்கள் என்றே வவுனியாவில் அழைக்கிறார்கள்) மூன்று மாதத்திலேயே வெளியே வந்து விடுகிறார்கள். ஏனென்றால் உள்நாட்டில் உள்ள ஒருபகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு ஆள்களை அனுப்புவது குற்றம் என்று காரணம் காட்டி அவர்களுக்கு தண்டனை வழங்க எமது நாட்டின் சட்டத்தில் இடமில்லை. எனவே மூன்று மாதத் தண்டனையை முடித்து விட்டுவரும் 'ஏஜென்ஸிக் காரர்கள்' வந்தவுடன் நேரே வீட்டுக்குச் சென்று குளித்து முழுகி புத்தாடை அணிந்து, கோயில்களுக்குச் சென்று நேர்த்திக் கடன்களை முடித்த கையோடு நேரே மீண்டும் இந்தத்தொழிலுக்கே திரும்பி விடுகிறார்கள் இவர்களுக்கு படையினர் வட்டாரத்திலும் தொடர்பு இருப்பதால் — இவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்தால் தொடர்புடைய படையினரின் தலைகளும் உருளும் என்பதாலேயே இவர்கள் கண்டும் காணாமல் விடப்படுகிறார்களாம்.

★

## தவக்காலச் சிந்தனை-13

சமூகத்தில் இன்று நிவாரணம் பெறுவதற்காக தம்மை ஏழையாகக் கொள்வோர் அதிகமாகியதால் கொடுப்பதில் அல்ல பெறுவதில் வசதி படைத்தோரும் முண்டியடித்து ஏழைப் பாத்திரம் ஏற்று நடமாடுவதைக் காண்கின்ற இக்காலத்தில் எமக்குத் தரப்பட்ட சிந்தனை வரிகளைப் பாருங்கள்.

''கொடுங்கள், உங்களுக்கு கொடுக்கப்படும்; அமுக்கி குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியில் போடுவார்கள். நீங்கள் எந்த அளவையால் அளப்பீர்களோ அதே அளவையால் உங்களுக்கு அளக்கப்படும்'' தீர்ப்பிடுவதிலும் தான தர்மம் செய்வதிலும் நீங்கள் எப்படிப்பட்ட நிலையில் வாழ்கின்றீர்கள் என உங்கள் அளவைகளைக் கொண்டு உங்கள் சுமைகள் குறையலாம்: அதனால் மற்றவர்களை கண்டனம் செய்வதில் காலத்தைக் கடத்தாது இன்றே மன்னிப்பு நாளாக ஏற்று மற்றவரை மன்னிப்பதிலும், பகிர்வதிலும், தீர்ப்பிடுவதிலும், மனங்களைப் பண்படுத்தி தவப் பயணத்தைப் பயனுள்ளதாக்கிக் கொள்ளுங்கள்.

## நாளை

மாசி 18

செவ்வாய்க்கிழமை

திதி: பூரணை

பிற்பகல் 12. 51 வரை.

நட்சத்திரம்: பூரம்

காலை 6.04 வரை.

சுபநேரம்: 10.58 - 12.28

ராகுகாலம்: 3.28 - 9.58

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதய வாக்கு

தூய உள்ளம் தருவைப் போல் செயற்படுகிறது.

-பிரம்மானந்தர்

## பாடசாலையில் தண்ணீர்த் தாங்கி

வலிகாமம், தெற்கு மார்ச் 1

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலய மாணவர்களின் குடிதண்ணீர்த் தேவைக்கென ஜி. ரி. இசற் நிறுவனத்தினால் ஒரு லட்சம் ரூபா செலவில் நீர்த் தாங்கி ஒன்றும், குழாய் வசதியும் வழங்கப்பட்டுள்ளன.

சுமார் ஐந்து லட்சம் ரூபா செலவில் விஞ்ஞான ஆய்வு கூடக் கட்டடம் ஒன்றும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற அங்கத்தவர்களுக்கான நி ஒதுக்கீட்டில் இருந்து இதற்கான நிதி வழங்கப்பட்டது.

புதிய விஞ்ஞான ஆய்வு கூடத்தையும், புதிய நீர்த் தாங்கியில் இருந்து நீர் வழங்கலையும் வலிகாமம் தெற்கு பிரதேச சபைத் தலைவர் மா. செல்வராசா உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

பாடசாலை அதிபர் க. செல்வகுமாரன் தலைமையில் ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைஅபிவிருத்திச் சங்கத்தினர், பழையமாணவர்கள் பலர் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

(ஐ-152)

# அரசையும், புலிகளையும் கண்டித்து அமெ. ராஜாங்க அமைச்சு அறிக்கை

கொழும்பு, மார்ச் 1

இலங்கையின் உள் நாட்டுப் போரிலே அரசாங்கப் படைகளும், விடுதலைப்புலிகளும் போர்க்களத்தில் தாங்கள் பிடிக்கும் கைதிகளைக் கொலை செய்து வந்திருக்கிறார்கள் என்று அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் 1998 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

போரினால் பாதிக்கப்படாத பகுதிகளில் இலங்கை அரசாங்கம் அதன் பிரஜைகளின் மனித உரிமைகளைப் பொதுவில் மதித்துச் செயற்படுகிறது. எவ்வாறெனினும் புலிகளுடன் தொடரும் போரிலே பாதுகாப்புப் படைகள் பாரதூரமான மனித உரிமை மீறல்களைத் தொடர்ந்து செய்கிறார்கள்.

புலிகள் போர் முனையில் தங்களால் பிடிக்கப்படும் கைதிகளைக் கொலை செய்வது உட்பட நீதி விசாரணைக்குப் புறம்பான கொலைகளைக் கிரமமாகச் செய்கிறார்கள். ஆள்கள் காணாமற் போதல், சித்திரவதை, அடாத்தான கைதுகள், தடுத்து வைப்பு மற்றும் பலாத்காரமாக நிதி அறவீடு ஆகியவற்றுக்கும் புலிகள் பொறுப்பாக இருந்துள்ளார்கள்.

கடந்த வருடம் அரசாங்கத் துருப்புகள் குறைந்தது 33 நீதி விசாரணைக்குப் புறம்பான கொலைகளைச் செய்திருக்கிறார்கள். போர் முனையில் பிடிபடும் புலிகள் இயக்கக் கைதிகளைப் படையினர் கொலை செய்திருக்கிறார்கள்.

வவுனியாவிலும், கிழக்கிலும் பாதுகாப்புப் படைகளின் காவலில் இருந்து 11 நபர்கள் காணாமற் போயுள்ளார்கள். அத்துடன் வடக்கில் இராணுவத்தின் பாதுகாப்பு முன்னரங்க நிலைக்கு அண்மையாகக் காணப்பட்ட பின்னர் குறைந்தது 25 பேர் காணாமற் போயிருக்கிறார்கள் அல்லது கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அத்துமீறல்களைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது, வடக்கிலும், கிழக்கிலும் விடுதலைப்புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கைகளின் போது குடிமக்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்கத் துருப்புக்கள் தொடர்ந்தும் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள் என்றும் ராஜாங்கத் திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## பனந் தொழில் வல்லுநர்களுக்கு உபகரணங்கள் அன்பளிப்பு

தென்மராட்சி. மார்ச் 1

பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியினால் நடத்தப்பட்ட பனம்தொழில் வல்லுநர்களுக்கான காய்வெட்டி பதநீர் இறக்கும் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட முப்பது பயிலுநர்களுக்கும் பயிற்சியாளர்களுக்கும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயத்தினால் ரூபா 60 ஆயிரம் பெறுமதியான பதநீர் உற்பத்திக்கான பொருள்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

அண்மையில் சாவகச்சேரி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் பனை அபிவிருத்திச்சபைவிரிவாக்க அலுவலர் வீ. ஜி. தங்கவேல் இந்த அன்பளிப்புப் பொருள்களை பயிலுநர்களுக்கும், பயிற்சியாளர்களுக்கும் வழங்கினார்.

பயிலுநர்களுக்கு 10 லீற்றர், 4 லீற்றர் ஒரு லீற்றர் கொள்ளளவு கொண்ட பரல்கள், கத்திக்கூடு, கத்தி, ரீசேட், துவாய் ஆகிய பொருள்களும், பயிற்சியாளர்களுக்கு தலா 500 ரூபா பணமும் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி, கொடிகாமம், பளை ஆகிய சங்கங்களிலிருந்து தலா பத்து பயிலுநர்கள் வீதம் தெரிவு செய்யப்பட்டு பயிற்சி வழங்கப்பட்டதாக சாவகச்சேரி சங்க பொது முகாமையாளர் வே. கிருஷ்ணன் தெரிவித்தார். (ஐ—117)

## அனுமதி இன்றிக் கட்டடம் அமைப்பதற்குத் தடை

வலிகாமம் தெற்கு, மார்ச் 1

சுன்னாகம் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பிரதேச சபையின் அனுமதியின்றி எந்தவித கட்டட வேலைகளையும் மேற்கொள்ள வேண்டாம் எனச் சுன்னாகம் பிரதேச சபைத் தலைவர் மா. செல்வராசா அறிவித்துள்ளார்.

இப் பகுதியில் பல இடங்களில் விதிமுறைகளுக்கு மாறாகப் பல புதிய வீடுகள் கட்டப்பட்டு வருவதாகவும், சட்ட திட்டங்களுக்கு அமைவாகக் கட்டடங்கள் கட்டப்படாமலும் மக்கள் தம் இஷ்டப்படியெல்லாம் கட்டட வேலைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பிரதேச சபையினரினதும், சுகாதார சேவைப் பகுதியினரதும் அனுமதி இன்றிக் கட்டடங்களைக் கட்டுவோர் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கட்டடப் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வோரும், இதற்காகக் கடன் பெற முற்படுவோரும் பிரதேச சபையினரின் முன் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (ஐ-152)

## வீதியில் அநாதரவாகக் காணப்பட்ட ரீ.வி.!

### கட்டப்பராயில் பரபரப்பு

வலி. கிழக்கு, மார்ச் 1

கல்வியங்காடு — கட்டப்பராய்ப் பகுதியில் — பருத்தித்துறை வீதியில் — நேற்று முன்தினம் காலை அநாதரவாகக் காணப்பட்ட தொலைக்காட்சிப்பெட்டி ஒன்றினால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இதனால் பருத்தித்துறை — யாழ்ப்பாணம் பிரதான வீதியில் போக்குவரத்தும் சிறிது நேரம் பாதிக்கப்பட்டது.

வீடு ஒன்றில் பொருள்களைத் திருடிய திருடர்களே இந்தத் தொலைக்காட்சிப் பெட்டியை அவ்விடத்தில் கைவிட்டுச் சென்றிருக்க வேண்டும் எனக் கூறப்படுகிறது.

கட்டப்பராய் கலைமணி வீதியில் உள்ள வீடு ஒன்றின் ஓடுகளைப் பிரித்து உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த தொலைக்காட்சிப் பெட்டியைத் திருடிச் சென்றிருந்ததாகவும் —

பழுதடைந்த நிலையில் காணப்பட்ட அந்த தொலைக்காட்சிப் பெட்டியே வீதியோரம் வீசப்பட்டிருக்கலாம் என்றும் —

தெரிவிக்கப்படுகிறது.

காலையில் வீதி ரோந்தில் ஈடுபட்ட படையினர் இத் தொலைக்காட்சிப் பெட்டியைக் கண்டதும் அது குறித்து தகவல் தெரிவித்ததை அடுத்து மேலதிக படையினர் அப்பகுதிக்கு விரைந்து வந்தனர். அப்பகுதி வீடுகளும், வாகனங்களும் சோதனையிடப்பட்டன. பின்னர் அந்தத் தொலைக்காட்சிப் பெட்டி குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டது. (ஐ-180)

## ஒரு சுகாதார பரிசோதகரே கடமை

வலிகாமம் தெற்கு, மார்ச் 1

யாழ்ப்பாணம் சுகாதாரத் திணைக்களத்தில் போதிய பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இல்லாமையால் சுகாதார தொழிற்பாடுகள் சீராக நடைபெறுவதில்லை எனத் தெரிய வருகின்றது.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மூன்று சுகாதார பரிசோதகர்கள் கடமையாற்றவேண்டிய போதிலும் ஒருவரே மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் தற்போது கடமையாற்றி வருகின்றார்.

வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு ஆகிய பகுதிகளின் சகல சுகாதார தேவைகளையும் ஒரு சுகாதார பரிசோதகரே தனித்து பூர்த்தி செய்யவேண்டிய நிலை உள்ளது. (ஐ—152)

## கிராம அலுவலர் நியமனம்

நல்லூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட ஜே—98 கிராம அலுவலராக செல்வி நி. கவிதா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அண்மையில் பயிற்சி பெற்று புதிதாக நியமனத்தை ஏற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். (ஐ-72)

## செத்தல் மிளகாய் விலை சரிகிறது

அரியாலை, மார்ச் 29

யாழ். நகரில் செத்தல் மிளகாயின் விலை சரியத் தொடங்கி உள்ளது.

நகரில் உள்ள வர்த்தக நிலையங்களில் செத்தல் மிளகாய் கிலோ 250 ரூபா முதல் 275 ரூபா வரை விற்கப்படுகின்றது.

கொழும்பில் இருந்து கப்பல் மூலம் தனியார் வர்த்தகர்கள் செத்தல் மிளகாயைத் தருவித்ததை அடுத்தே இதன் விலை இறங்கியுள்ளது.

இன்னும் சில தினங்களில் செத்தல் மிளகாயின் விலை மேலும் வீழ்ச்சியுறும் என எதிர்பார்க்கப்படுவதாக வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-17)

படை முகாம் வாபஸ்;

## அல்லிப்பளை அம்மன் ஆலயத்தில் மீண்டும் பூசை

தென்மராட்சி, மார்ச் 1

கடந்த மூன்று வருடங்களாக மூடப்பட்டிருந்த பளை அல்லிப்பளை அறத்தி அம்பாள் ஆலயம் இன்று முதல் பொது மக்களின் வழிபாட்டுக்காகத் திறந்து விடப்படவுள்ளது.

ஆலயத்தினை மக்கள் வழிபடுவதற்கு திறந்து விடுமாறு இப் பகுதி இந்து மக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து ஆலயத்திற்கு அருகில் இருந்த முகாம் அகற்றப்பட்டு ஆலய சுற்றாடல் பரிசோதனை செய்யப்பட்ட பின்னர் கடந்த வெள்ளி முதல் அப்பகுதியிலிருந்து படையினர் வெளியேறியுள்ளனர்.

இன்று ஆலயத்தில் விசேட அபிஷேகம் செய்யப்படவுள்ளது.

அல்லிப்பளை அறத்தி அம்பாள் ஆலயத்தில் பங்குனித் திங்கள் பொங்கல், விசாகப் பொங்கல் என்பன சிறப்பாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (ஐ-117)

## செப்ரிசீமியா மரணம்

செப்ரிசீமியாவின் தாக்கத்திற்குள்ளாகி நேற்றும் ஒரு நோயாளி யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்.

சுன்னாகத்தைச் சேர்ந்த தம்பிராசா அன்னலட்சுமி (வயது 55) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 18 ஆம் திகதி காய்ச்சல் காரணமாக வார்ட்டில் அனுமதிக்கப்பட்டு பத்து நாள்களின் பின் நேற்று அங்கு மரணமானார். (ஐ-15)


வாழிய எங்கள் துணைவேந்தே!

துணைவேந்தர் பணியில் இன்று 3 ஆவது ஆண்டில் தடம்பதிக்கும்

பேராசிரியர்

பொ. பாலசுந்தரம்பிள்ளை

அவர்கள்

அயரா உழைப்பு — அர்ப்பணிப்பு
தளரா மனது — திட்டமிட்ட செயல் வீரம்
அழகாய் இணைந்த,
உங்கள் அன்புத் தலைமையிலே
எல்லோரும் இணைந்து நிமிர்கின்றோம்.
வெள்ளிவிழாக் காணும் எங்கள்
உயர்பீடத்தில் உங்கள்
ஈராண்டுப் பணிகளை வாழ்த்துகின்றோம்.

த. க. தனேந்திரன்
யாழ். பல்கலைக்கழகம்

(63530)



விண்ணக வாழ்வின் 31 ஆம் நாள் அஞ்சலி



ஞானப்பிரகாசம் அலோசியஸ்

[போதகர், நாற்சதுர சுவிசேஷ சபை]

இகம் 20 — 06 — 1959

பரம் 29 — 01 — 1999

வன்னி சென்றநீர் வருவழி காத்திருந்தோம்
எண்ணியகருமங்கள் இயற்றவே பார்த்திருந்தோம்
அந்தோ பேரிடியை ஆற்றுவமோ எம் துயரை
இ (ய)ந்திரப்பறவையது இட்ட குண்டினாலே
வெந்துயர் பட்டு நாம் வேகின்றோம் துயராலே!
ஐயா நீரெம்மை அழவிட்டுச் சென்றீரோ?
பைய வருவாயென பார்த்திருப்போம் வாராயோ?

நின் பிரிவால் துயருறும்

மனைவி, பிள்ளைகள், அம்மா, அப்பா, மாமன், மாமி, சகோதர சகோதரிகள், மைத்துனர், மைத்துனிகள்.

126, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு.

(63532)

# ஜெனரல் தளுவத்த நாடு திரும்பினார் ஜனாதிபதிக்கு இவ்வாரம் அறிக்கை

கொழும்பு, மார்ச் 1

கூட்டுப் படை நடவடிக்கைகள் சபையின் தலலவர் ஜெனரல் றொகான் டி. எஸ். தளுவத்த 20 நாள் வெளிநாட்டு விஜயத்தை முடித்துக் கொண்டு கடந்த வியாழனன்று கொழும்பு திரும்பினார்.

பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகளில் இயங்கும் கூட்டுப்படைக் கட்டமைப்புகளின் செயற்பாடு, தொழில் நுட்பம் ஆகியவற்றை நேரில் அறிந்து கொள்வதற்காக அவர் இந்த மூன்று நாடுகளிலும் சுற்றுப் பிரயாணம் மேற்கொண்டார்.

ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் இந்த விஜயத்தை மேற்கொண்ட ஜெனரல் தளுவத்த தனது விஜயத்தின் பலாபலன்கள் குறித்து விரிவான அறிக்கை ஒன்றை இவ்வாரம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் சமர்ப்பிப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தமது வெளிநாட்டு சுற்றுப் பயணத்தின் போது ஜெனரல் தளுவத்த பிரிட்டன் றோயல் பாதுகாப்புப் பயிற்சிக் கல்லூரிக்கும் பிரிட்டிஷ் படைகளின் பயிற்சி நிலையங்களுக்கும் விஜயம் செய்ததுடன் பிரிட்டனின் – ணு ஆயுதக் கிடங்குகளையும் சென்று பார்வையிட்டார்.

அமெரிக்காவில் 10 நாள்கள் தங்கியிருந்த அவர் ஹவாய்த்தீவில் அமைந்துள்ள அமெரிக்க இராணுவத்தின் தென்பசுபிக்கட்டளைப்பீடத்துக்கும் விஜயம் செய்தார்.

ஜனாதிபதியால் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுப்படை நடவடிக்கைகள் சபையின் (ஜே.ஓ.பி.) செயற்பாட்டை நவீன மயப்படுத்தும் நோக்குடன் தளுவத்தவின் இந்த வெளிநாட்டுப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டதாகத் தெரிய வருகின்றது. (ஐ-6)

## விசேட அடையாள அட்டை பெறல்

கொழும்புத்துறை, மார்ச் 1

யாழ். மாவட்டத்தில் கடந்த 1996, 1997, 1998 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பித்து இதுவரை கிடைக்கப்பெறாதோர் உடனடியாக தங்களது பகுதிக் கிராம அலுவலருடன் நேரில் தொடர்பு கொண்டு தாங்கள் விண்ணப்பித்த திகதி முதலாய பூரண விவரங்களை இல. 76, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள விசேட அடையாள அட்டைப் பிரிவு ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தால் அவற்றிற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என + திணைக்களத்தின் கருத்திட்ட முகாமையாளர் தி. திருலிங்கநாதன் தெரிவித்துள்ளார், (ஐ-30)

## தாக்குதலில் இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச். 1

படையினரின் தாக்குதலுக்கு உள்ளானதாக இளைஞர் ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வேலணை இரண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த இரண்டு குழந்தைகளின் தந்தையான சோமசுந்தரம் கேதீஸ்வரன் (வயது 27) என்பவரே காயம் அடைந்தவர் ஆவார்.

கடந்த 25 ஆம் திகதி இடம் பெற்றதாகக் கூறப்படும் இந்தச்சம்பவம் தொடர்பாக மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் முறையிடப் பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-15)

# சிறையில் சலுகைகளை அனுபவிக்கும் எம்பிலிபிட்டிய கொலைக் குற்றவாளிகள்

கொழும்பு. மார்ச் 1

எம்பிலிப்பிட்டிய மாணவர்கள் கொலை வழக்கில் 10 ஆண்டுகள் கடூழியச் சிறை விதிக்கப்பட்ட கைதிகள் சிறைச்சாலையில் சலுகைகளை அனுபவித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிறைச்சாலை விதிகளின் படி தண்டனை பெற்ற கைதி ஒருவரை மாதத்தில் ஒரு முறையே வெளியார் சந்திக்கலாம். ஆனால் இக்கைதிகளைச் சந்திக்க தினமும் சிறைச்சாலைக்கு உறவினர்கள் வந்து செல்கின்றனர்.

சிறைக் கைதிகளைச் சந்திக்க வருபவர்கள் காலை 8.00 மணிக்கும் மாலை 5.00 மணிக்கும் இடைப்பட்ட நேரத்திலேயே வர முடியும். ஆனால் இந்தக் கைதிகளை இரவு நேரங்களில் கூட இராணுவ அதிகாரிகள் வந்து சந்திப்பதாகவும் கைதிகளுக்குத் தேவையான உணவு மற்றும் தேவைப்படும் பொருள்களை வழங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## பாராட்டு விழா

நெல்லியடி, மார்ச் 1

தென் புலோலி ஸ்ரீ முதலி அம்பாள் ஆலய பிரதம சிவாச்சாரியார் பிரம்மஸ்ரீ அ. பிரேமச்சந்திரக் குருக்கள் இன்று திங்கள் இரவு 7 மணிக்கு ஆலய முன்றலில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படவுள்ளார்.

மேற்படி ஆலய தரும பரிபாலன சபைத் தலைவர் து. மார்க்கண்டு தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை உட்பட பலர் ஆசியுரை வழங்குவர். (இ-109)

## இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்ப் போட்டிகள் அதிபர் ஜீ. இராசநாயகம் தலைமையில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) திருமதி றெஜீனா இருதயநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ஐ-86)

★ ★ ★

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1. 30 மணிக்கு ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் பாடசாலை அதிபர் நா. சண்முகரத்தினம் தலைமையில் நடைபெறும்.

இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக பொறியியலாளர் கு. சிவபாலனும், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் சி. சிவஞானசுந்தரமும், பெரும்பாக அஞ்சல் அத்தியட்சகர் சி. தர்மராசாவும் கலந்து கொள்வர். (ஐ-72)

★ ★ ★

சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி பாடசாலை அதிபர் வி. ஏரம்பமூர்த்தி தலைமையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன் பிரதம விருந்தினராகவும், இலங்கை வங்கி உப முகாமையாளர் சி. குமாரசாமி சிறப்பு விருந்தினராகவும், ஓய்வு பெற்ற தபால் அதிபர்களான சி. யோகநாதன், இ. திருநாவுக்கரசு ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (ஐ-27)

★ ★ ★

வயாவிளான் குட்டியப்புலம் அ. த. க. பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று காலை 9 மணிக்குப் பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் செ. கந்தசாமி தலைமையில் நடைபெறும்.

வலி-வடக்கு பிரதேச செயலர். திருமதி ம. திலகநாயகம் போல் பிரதம விருந்தினராகவும், வலிகாமம் வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆ. வ. கணேசலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் வயாவிளான் மத்திய மகாவித்தியாலய அதிபர் ஆ. சி. நடராசா, வயாவிளான் கிழக்கு கிராமசேவையாளர் சு. தர்மகுலசிங்கம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் பங்குபற்றுவர். (இ-3)

# இனப்பிரச்சினை தீர்க்கப்படாவிடில் பல பிரபாகரன்கள் தோன்றுவர்

## வன்னி சென்று திரும்பிய தேரர் கருத்து

கொழும்பு, மார்ச் 1

முல்லைத்தீவுக்குச் சென்ற போது தமிழ் மக்கள் படும் துன்பங்களை எல்லாம் நேரில் கண்டேன். இத்தகைய துன்பங்களுக்கு எல்லாம் காரணம் தொடர்ந்து நிலவிவரும் இனப்பிரச்சினையே. இந்த இனப்பிரச்சினைக்கு தீர்வு காணாவிட்டால் இன்னும் பல பிரபாகரன்கள் இந்த நாட்டில் தோன்றுவார்கள்.

இவ்வாறு தெரிவித்தார் அண்மையில் வன்னி சென்று திரும்பிய புத்தசாசன அமைச்சைச் சேர்ந்த ஆலோசகர், வணக்கத்துக்குரிய அத்தகல்லே இந்நாரத்னதேரர்.

சமாதானத்துக்கான கூட்டமைப்பின் ஏற்பாட்டில் கொழும்பில் கடந்த 26 ஆம் திகதி இடம்பெற்ற பேரணியில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

முல்லைத்தீவுக்கு நான் சென்றிருந்த வேளை அங்கு மக்கள் படும் பல்வேறு துன்பங்களை எனது கண்ணால் கண்டேன்.

தமிழ் மக்களுக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை என கொழும்பில் இருந்து சிலர் அறிக்கைகள் மூலமாகவும் நேரிலும் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நாட்டில் தொடரும் அழிவுகளைத் தடுத்து நிறுத்துவதானால் சமாதானம் உடனடியாக உருவாக்கப்பட வேண்டும்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



கொக்குவில், மார்ச் 1

கொக்குவில் கிழக்கு- குளப்பிட்டி மங்கள மகாகாளி கோயில் மாசி மகத்திருவிழா இன்று காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

108 சங்காபிஷேகம் நடைபெற்று மாலை 4.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் ஊஞ்சல், வீதியுலாக் காட்சியும் இடம்பெறும். (இ)

★ ★ ★

மாசி மகத்தையொட்டி அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் இன்று காலை முதல் விசேட அபிஷேகங்களும் அதனைத்தொடர்ந்து பூசை வழிபாடுகளும் இடம் பெறும். (இ-100)

★ ★ ★

வடமராட்சி, மார்ச் 1

மேலைப் புலோலி பண்டாரி அம்மன் கோயில் வருடாந்த பிரம்மோற்சவத்தின் தீர்த்தோற்சவம் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (ஐ-173)

★ ★ ★

கொழும்புத்துறை. மார்ச் 1

தொல்புரம் கொட்டியம்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்மன் தேவஸ்தான மாசி மகத் திருவிழா இன்று காலை 9. 00 மணியளவில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி தொடர்ந்து அம்பாள் திருவீதிவலம் வருவார்.

அன்றைய தினம் மாலை 6 மணியளவில் வழமைபோல மாசிமாதப் பூரத்திருவிழா நடைபெறும் – விழாக்கிரியை கள்கிரியாஜோதி சிவாச்சார்ய மணி ச. மு. ரவிக்குருக்கள் தலைமையில் நடைபெறும். (இ-30)

★ ★ ★

நீர்வேலி, மார்ச் 1

நீர்வேலி காமாட்சியம்பாள் கோயில் மாசி மக உற்சவத்தையொட்டி இன்று திங்கட்கிழமை பகல் சங்காபிஷேகமும் மாலை தீபபூஜையும் நடைபெற்று, அம்பாள் அலங்கார பூஜிதையாக வீதி வலம் வந்து அருள்பாலிப்பார். (ஐ-110)

## சிறுவன் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 1

இனந்தெரியாத 'நெயில் கட்டர்' போன்ற ஒரு பொருளைக் கழற்றிப் பார்த்த போது அது வெடித்ததால்சிறுவன் ஒருவர் வலது கைவிரல்கள் துண்டிக்கப்பட்டுக் காயம் அடைந்தார்.

மானிப்பாய் டச்சுறோட் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் சிவஞானம் கஜேந்திரன் (வயது 12) என்பவரே காயம் அடைந்தவர் ஆவார்.

காயம் அடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

## பெண் காயம்

மட்டக்களப்பு, கொம்மாதுறையில் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் பெண் ஒருவர் காயமடைந்தார்.

நேற்று முன்தினம் மாலை இச்சம்பவம் இடம் பெற்றது.

பிள்ளையான் புஸ்பராணி (31 வயது) என்ற இப்பெண் தற்போது மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தற்செயலாக ஏற்பட்ட சம்பவம் என இராணுவத்தரப்பால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-21)

## நேர்முகப் பரீட்சை நேற்று ஆரம்பம்

4ஆயிரம் பட்டதாரிகளைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை நேற்று யாழ் செயலகத்தில் நடைபெற்றது.

கொழும்பில்இருந்து வருகை தந்துள்ள திறைசேரி நிதிப் பணிப்பாளர் எஸ். பாலசுப்பிரமணியம், கணக்காளர் கே. கனகசபை ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்குநேற்று சுமார் 300 கலைப் பட்டதாரிகள் சமுகம் கொடுத்தனர்.

நேற்று ஆரம்பமான இந்த நேர்முகப் பரீட்சை இன்றும் நாளையும் தொடர்ந்து நடைபெறும். (இ-15)

# கல்விச் சீர்திருத்தம் பற்றி அதிபருக்குவிளக்ககூட்டம்

பருத்தித்துறை, மார்ச் 1

யாழ். மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களிலுமுள்ள பாடசாலை அதிபர்களுக்கு இவ்வாரம் புதிய கல்விச் சீர்திருத்தம் தொடர்பான விளக்கக் கூட்டங்களை நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக புதிய கல்விச் சீர்திருத்தங்கள் பற்றி அதிபர்களுக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் இந்த விளக்கக்கூட்டங்கள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### வடமராட்சியில்

வடமராட்சிக் கல்வி வலயத்திற்குள் உள்ள பாடசாலை அதிபர்களுக்கான விளக்கக்கூட்டம் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் எதிர்வரும் வியாழக்கிழமை காலை 8-45 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு வருகை தரும்போது 2-3-1999 அன்றுள்ளபடி தரரீதியாக மாணவர் விவரம், ஆசிரியர்களதும் ஏனைய கல்விசாரா ஊழியர்களதும் வகுதி ரீதியான விவரங்கள் என்பவற்றை எடுத்து வருமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா அறிவித்துள்ளார்.

### வலிகாமத்தில்

கல்விச் சீர்திருத்தம், பாடசாலை மறுசீரமைப்பு ஆகியன உள்ளடங்கிய புதிய கல்விச் சீர்திருத்த விளக்கக் கூட்டங்கள் வலிகாமம் கல்வி வலயத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறவுள்ளன.

மேற்படி வலயத்திலுள்ள சங்கானை, சண்டிலிப்பாய் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் அன்று காலை 9 மணிமுதல் 12மணி வரை மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் —

உடுவில், தெல்லிப்பழை கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் அன்று பிற்பகல் 1–30 மணிமுதல் 4-30மணிவரை இராமநாதன் கல்லூரியிலும் —

நடைபெற உள்ளன.

மாகாண கல்வி அமைச்சிலிருந்து உயர் அதிகாரிகள் கலந்து கொள்ளும் இக்கூட்டத்தில் சகல அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா கேட்டுள்ளார்.

அதிபர்களைத்தங்கள் பாடசாலையில் உள்ள வகுப்பு ரீதியான மாணவர் தொகை மற்றும் ஆசிரியர்களினதும் ஏனைய கல்வி சாரா ஊழியர்களினதும் வகுதி ரீதியான விவரங்களைக் கொண்டு வருமாறும் அவர் பணித்துள்ளார். (ஐ-118-27)

## மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்)

மக்கள் எதுவித அச்சமும் இன்றி வாழ்வதை உறுதிப்படுத்தும் வகையில் பாதுகாப்புத் திட்டம் ஒன்றை அரசாங்கம் அமுல்செய்து வருகின்றது.

முன்னர் அமுல் செய்யப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் அரசியல்வாதிகள் தமது செல்வத்தைப் பெருக்குவதற்கு உதவின.

அரசாங்க அதிகாரிகள் சுய கௌரவத்துடன் தமது பணிகளைச் செய்யக் கூடியதாகவுள்ளது —

இப்படி ஜனாதிபதி தெரிவித்தார்.

இதையடுத்து ஜனாதிபதி ஹிங்கிராங்கொடை விமானத் தளத்துக்குச் சென்று சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

'சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டப் பொலீஸார் பாரபட்சமின்றிக் கடமை புரியவேண்டும்' என்று ஜனாதிபதி அங்கு பொலீஸாரிடம் தெரிவித்தார். (இ-3)

# ஆணைக்குழு அதிகாரி காங்கேசன் விஜயம்

வடமராட்சி, மார்ச் 1

காங்கேசன்துறை பயங்கரவாத தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளின் சேமநலன்களை அறியும் பொருட்டு யாழ்ப்பாணம் மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி எஸ். ஸ்ரீதரன் நாளை மறுதினம் புதன்கிழமை காங்கேசன்துறை செல்லவுள்ளார்.

கைதிகளின் உறவினர்கள் கையளிக்கும் கடிதங்கள், உணவுப்பார்சல்களையும் அவர் எடுத்துச் சென்று கைதிகருக்கு வழங்குவதுடன் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளிடமிருந்தும் கடிதங்களைப் பெற்றுவந்து உறவினர்களிடம் கையளிக்கவுள்ளார். (க-137-6)

# மனித உரிமை மீறல் குறித்து அமெரிக்காவில் கூட்டம்!

கொழும்பு, மார்ச் 1

இலங்கை மனித உரிமை மீறல்கள் அவற்றின் முன்னேற்றம் தொடர்பாக நாளை அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் ஏற்பாட்டில் வாஷிங்டனில் நடைபெறும் கலந்துரையாடலில் இலங்கைத் தூதுவர் கலந்து கொள்ள மாட்டார்.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சு உலக நாடுகளில் நிலவும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தொடர் கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த தொடரில் இலங்கை, டொமினிக்கன் குடியரசு, சீனா ஆகிய நாடுகள் தொடர்பான கலந்துரையாடல் நாளை வாஷிங்டனில் நடைபெறவிருக்கின்றது.

## இலங்கை பங்கு பற்றாது

இதில் பங்குபற்றுமாறு அமெரிக்க வெளிவிவகார அமைச்சு இலங்கைக்கு அழைப்பு விடுத்திருந்தது.

இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்ற வேண்டாம் என்று அமெரிக்காவில் உள்ள இலங்கைக்கான தூதுவர் வர்ணசேன ராசபுத்திரத்தை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பணித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் அமெரிக்க ராஜாங்க அமைச்சு சர்வதேச மன்னிப்புச் சபை, ஐ. நா. சபை மற்றும் சர்வதேச அரசசார்பற்ற அமைப்புக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் பங்குபற்றுகின்றனர்.

இந்தக் கலந்துரையாடலுக்கு அமெரிக்காவில் உள்ள இலங்கைத் தூதுவரை அழைத்ததைக் குறை கூறி அமெரிக்க வெளிவிவகார அமைச்சு பிரதி அமைச்சர் காத் இன்ரபேத்துக்கு கதிர்காமர் கடிதம் எழுதியுள்ளார்.

உரிய முறையில் இந்த விவகாரம் கையாளப்பட்டால் இலங்கை மனிதஉரிமை நிலை குறித்த அறிக்கையை இலங்கை அரசு அனுப்ப முடியும் என்றும் கதிர்காமர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (இ-3)

உ

நாவற்குழி

அருள்மிகு

அம்பாள் ஆலய பொங்கல் விழாவும் புனரமைப்புப் பணி ஆரம்பமும்

கண்ணாடித் தொழிற்சாலைக்கு அருகிலுள்ள வீதியில் எழுந்தருளியுள்ள அம்பாள் ஆலயப் பொங்கலும் புனரமைப்புப்பணி ஆரம்பமும்

பௌர்ணமிதினமான இன்று (01-03-1999)

திங்கள் காலை 9-00 மணிக்கு நடைபெறும்.

புனரமைப்பு பணிகள் சிமிலிகுமார் தலைமையில் ஆரம்பமாகி நடைபெறும்.

விளம்பர அன்பளிப்பு:

சிமிலி குமார்

455, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

கிளைகள்:

தேவகி களஞ்சியம்,

76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

முருகன் பான்சி,

நெல்லியடி. (சி/6645)

இதோ வந்துவிட்டது!

புத்தம் புதிய மொடேல் DISH ANTENNAக்கள்

அமெரிக்கத் தயாரிப்பான Paraclipse Automatic Dish Antennaக்கள்

அமெரிக்கத் தயாரிப்பான Eurostar Dish அன்ரெனாக்கள்

கொரியன் தயாரிப்பான ALFA Cold Dish அன்ரெனாக்கள்

60 தொலைக்காட்சி அலைவரிசைகள் கொண்ட 8 அடி Dish அன்ரெனாக்கள்

T. V. கள்

SONY G. 21
SONY 2197
SONY 2199
SONY G 14
AKAI 20 T
SAMSUNG 20 WT

DECK வகைகள்

Panasonic SR 30
Panasonic SR 50
Panasonic 220 AMJ
Panasonic 225 AMJ
Panasonic 220 AM
Samsung VCP
LG VCR

EUROMIND Active Antennaக்கள் மற்றும் பல்வேறுவகையான றேடியோ FANS, T. V. STAND, KOOKABURRA CRICKET BAT, WILSON, DUNLOP பந்து வகைகள் AUDIO CD PLAYER, AUDIO CASSETTE, VIDEO CASSETTE, AUDIO CD க்கள், புத்தம் புதிய ஐங்கரன் ஒறிஜினல் வீடியோப் பிரதிகள் என்பனவற்றை மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

பெற்றுக்கொள்ள வேண்டிய முகவரி:

அருண் வீடியோ மூவி

பிரதான வீதி, நெல்லியடி.

(63533)

# வெற்றி தோல்வி இன்றி முடிந்த கிரிக்கெட் ஆட்டம்

கொழும்பு, மார்ச் 1

கொழும்பு எஸ். எஸ். ஸி மைதானத்தில நடைபெற்று வந்த இந்தியா - இலங்கை அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் ரெஸ்ட் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இந்தப் போட்டியில் இந்தியா முதல் இன்னிங்ஸில் ஏழு விக்கெட்டுக்கள் இழப்புக்கு 518 ஓட்டங்களையும் இரண்டாம் இன்னிங்ஸில் 5 விட்கெட்டுக்கள் இழப்பிற்கு 306 ஓட்டங்களையும் பெற்றது.

இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 485 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் பங்குபற்றும் ஆசிய ரெஸ்ட் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இதுவரை நடந்த போட்டிகளில் பாகிஸ்தான் 17 புள்ளிகளையும், இந்தியா 10 புள்ளிகளையும், இலங்கை 4 புள்ளிகளையும் பெற்றுள்ளன.

எதிர்வரும் வியாழக்கிழமை லாகூரில் நடைபெறும் ஆட்டத்தில் பாகிஸ்தானும் இலங்கையும் மோதவுள்ளன.

அந்தப்போட்டி முடிவை அடுத்து இறுதிப்போட்டியில் பங்குபற்றும் அணிகள் தெரிய வரும்.

பாகிஸ்தானில் நடைபெறும் போட்டியில் இலங்கை அணி ஹசான் திலகரத்தின தலைமையில் பங்குபற்றவிருக்கின்றது.

இலங்கை அணித் தலைவரான அர்ஜுன ரணதுங்க நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் காயமடைந்ததால் அரவிந்த டி சில்வா தலைமையில் அணி செல்லவிருந்தது.

நேற்றைய ஆட்டத்தில் அவரும் காயமடைந்ததால் ஹசான் திலகரத்தின தலைமையில் அணி பாகிஸ்தான் செல்கிறது.

இந்த அணியில் இலங்கையில் முக்கிய ஆட்டக்காரர்களான அர்ஜுன ரணதுங்க, அரவிந்த டி சில்வா, சனத் ஜெயசூரியா, முத்தையா முரளிதரன், சமிந்தவாஸ் ஆகியோர் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. [இ-3]

## ஐ. தே. க..

(முதலாம் பக்கத் தொடர்)

களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத்தீர்க்க வரவு- செலவுத்திட்ட நிதியில் இருந்து 4 இலட்சம் ரூபாவை அவர் ஒதுக்கியிருந்தார்.

அந்த வேலைகளைப் பார்ப்பதற்காக செல்ல பாதுகாப்பு அமைச்சிடம் இருந்து அவர் அனுமதி பெற்றிருந்தார்.

இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிக்கு மருத்துவக் குழுவுடன் இன்று செல்லும் அவர் மருத்துவ முகாம் ஒன்றையும் அங்கு நடத்த விருக்கிறார்.

அத்துடன் ஆயிரம் மூக்குக் கண்ணாடிகளையும் வழங்கவிருக்கிறார்.

விடுதலைப் புலிகள் அமைப்புப் பிரதிநிதிகளுடன் அவர் கலந்துரையாட விருப்பதாகவும் கூறப்பட்டது. (இ-3-164)

## கூட்டம்

மானிப்பாய், மார்ச் 1

நவாலி கிறிஸ்தவ வாலிபர் சங்க (வை. எம். சீ. ஏ,) 108 வது வருடாந்தக் கூட்டம் தலைவர் செ. ஜெயரத்தினம் தலைமையில் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 3. 30 மணிக்கு வை. எம். சீ. ஏ. இல்லத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-90)

## பலகல்லவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

றன.

வன்னியில் பலகல்லவின்கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்துடன் வெலிஓயாவின் வடக்குப் பக்கமாக உள்ள பிரதேசமும் அவரின் கீழ் வரவிருக்கின்றது. (இ-3)

நிரு

ரியூசன் சென்ரர்

நோண்டாவில்.

A/L 2000

வெப்பவியல்

த. சர்பந்தன்

ஆரம்பம்:- 01-03-99

( திங்கள் )

(63512)

## மெய்...

(முதலாம் பக்கத் தொடர்)

தெரிவித்ததாக அவர் கூறினார்.

இது தொடர்பாக புளொட் அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் எஸ். கிருபைராஜா தெரிவிக்கையில், தமது அமைப்பின் சார்பில் மெய்ப்பாதுகாவலர்களை நியமிக்கப் பட்டியல் தயாரிக்கப்படுகின்றது என்றும் ஓரிரு தினங்களில் அதுபற்றி அறிவிக்கப்படும் என்றும் கூறினார். (இ—3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01 - 03 - 1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.